# செந்தமிழ்

தொகுதி : 95 திருவள்ளுவர் ஆண்டு 2032 பிப்ரவரி 2001 பகுதி : 2

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம். பி. ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடை நம்பி | உறுப்பினர் |
| திரு.ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ.கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். கு. துரைராசு
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணா மூர்த்தி
பேரறிஞர். எஸ்.எம். கமால்
பேரறிஞர். ஈ. கி. இராமசாமி
பேராசிரியர். சே. அரிராமநாதன்
பேரறிஞர். அ.மா. பரிமணம்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | | வெளிநாடு | |
|---|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. | 60 | ரூ. | 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. | 500 | ரூ. | 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 1000 | ரூ. | 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. | 6 | | |


மதிப்புறு ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை ........................ 39
பா. சூரிய நாராயணன்

2. புறநானூற்றில் இரு மகளிர் ........................................ 45
பேராசிரியர் ந.சுப்பிரமணியன்

3. புலவர் வறுமையில் பூத்த மலர் ................................ 51
இரா. இளங்குமரன்

4. நெஞ்சோடு தலைமகன் .............................................. 54
பேரறிஞர் க.கனகராசு

5. வடசொற் கிளவி ........................................................ 58
டாக்டர். அ.மா.பரிமணம்

6. தேவாரத்தில் தத்துவ விளக்கம் ................................ 71
வித்துவான் தா.குருசாமி தேசிகர்

7. மதிப்புரை .................................................................. 75

# இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை

**பா. சூரிய நாராயணன்**

இன்றைய உலக அமைதிக்கு எதிரான ஒரு அறைகூவலாகவும், ஐக்கிய அமெரிக்கா போன்ற வலுவான நாடுகளின் கவனத்தையும் ஈர்த்தும் இருப்பது இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சனை ஆகும். இஸ்ரேல் நாட்டினரான யூதர்களும் (Jews), பாலஸ்தீன நாட்டினரான அரபிய மக்களும் (Arabs) பண்டைய மக்கள் இனங்களுள் ஒன்றான செமிட்டிக் (Semitic) இனத்தின் இரு கிளையினரே; அவர்களுடைய மொழிகளும் பண்டைய செமிட்டிக் மொழியின் இரு கிளைமொழிகளே. இவ்வாறு இனத்தாலும், மொழியாலும், ஓரளவு கலாச்சாரத்தாலும் ஒன்றுபட்ட இரு தேசிய இனங்களிடையே அடிக்கடி அழிவைத்தரும் போர்கள் தோன்றி உலகை அச்சுறுத்துவது வேதனைக்குரிய செய்தியாகும். எவ்வாறெனில் இந்த மத்திய கிழக்கு நாடுகளில் கிடைக்கும் பெட்ரோலியப் பொருட்களில் பெரும் பங்குதான் உலக நாடுகளின் எரிபொருள் தேவையை நிறைவு செய்கிறது; மேலும், இவற்றில் கிடைக்கும் கச்சா எண்ணெய்யைச் சுத்திகரித்து, இயந்திரங்களை இயக்குவதற்கு ஏற்பப் பக்குவப்படுத்திச் சந்தைக்குக் கொண்டுவந்து விற்பனை செய்யும் உரிமையை நெடுங்காலமாக ஐக்கிய அமெரிக்கா பெற்றிருக்கிறபடியால், அந்நாட்டின் தொழிலதிபர்கள் பலருக்கும் செல்வமும் செல்வாக்கும் பெருகியுள்ளன; எடுத்துக்காட்டு, இன்று அமெரிக்க யூதர் இராக்பெல்லர் (Rockfeller) 'எண்ணெய் அரசர்' எனப் புகழ் பெற்றுள்ளார். எனவேதான் அமெரிக்க அரசாங்கம் இவ்விரு நாடுகளுக்குமிடையே ஒற்றுமையை நிலைநாட்ட இடைவிடாமல் முயலுகிறது.

## 1. மத்திய கிழக்கு என்றும் மேற்காசியா என்றும் கூறப்படும் நாடுகளும் அவற்றின் பரப்பளவும், மக்கள் தொகையும் :

1. எகிப்து - (இது ஆசிய நாடு அன்று, ஆப்பிரிக்கக் கண்டத்தின் வட கிழக்கு மூலையிலுள்ளது, எனினும் இந்நாடும் மக்களினம், மொழி, இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினையில் மற்ற அரபிய நாடுகளுடன் தொடர்புடையது).

| | பரப்பளவு | | மக்கள்தொகை (1981 கணக்குப்படி) | தலைநகரம் |
|---|---|---|---|---|
| | 9,97,667 | ச.கி.மீ. | 4,92,80,000 | கெய்ரோ |
| 2. இஸ்ரேல் | 20,770 | " | 43,30,000 | ஜெருசலேம் |
| 3. ஜோர்டன் | 96,000 | " | 3,68,400 | அம்மான் |
| 4. குவயத் | 24,280 | " | 17,70,000 | குவயத் |
| 5. இராக் | 4,34,924 | " | 1,70,90,000 | பாக்தாத் |
| 6. லெபனன் | 10,400 | " | 35,00,000 | பெய்ரூட் |
| 7. ஓமன் | 2,68,800 | " | 1,20,00,000 | மஸ்க்கட் |
| 8. குவட்டார் | 11,437 | " | 3,72,000 | டோஹா |
| 9. சவூதி அரேபியா | 24,00,000 | " | 1,15,20,000 | ரியாத் |
| 10. சிரியா | 1,85,680 | " | 1,09,680 | டமாஸ்க்கஸ் |
| 11. யுனைட்டெட் ரிபப்ளிக் எமிரேட்டுகள் | 92,100 | " | 1,70,90,000 | அபுதாபி |
| 12. ஏமன் அராபிக் ரிபப்ளிக் | 1,95,000 | " | 63,50,000 | சானா |
| 13. ஏமன் ரிபப்ளிக் | 2,87,682 | " | 23,00,000 | ஏடன் |
| 14. இரான் | 16,48,000 | " | 49,860,000 | டெகரன் |
| 15. பாலஸ்டைன் | 10,429 | " | மக்கள் தொகை பற்றிய விவரங்களைக் கீழே காணவும். | |

மேலே குறிப்பிடப்பட்ட நாடுகளோடு இஸ்ரேல் நாட்டின் பரப்பளவை ஒப்பிடும்போது, அது மிகவும் சிறியது என்றும் அதன் பெரிய அளவு மக்கள் தொகையை வாழவைக்கக்கூடிய அளவு நிலம் அதனிடம் இல்லை என்றும் நாம் காணலாம்; இதிலிருந்து அந்நாடு தன் நில எல்லையை விரிவாக்கும் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது என்றும இதனை அண்டையிலுள்ள அராபிய நாடுகள் எதிர்க்கவே, யூதருக்கும் அராபியருக்கும் கடும் மோதல்கள் ஏற்படுகின்றன என்றும் நாம் தெரிந்து கொள்ளலாம். அராபியருடைய அராபிய மொழியும், யூதர் பேசும ஹீப்ரு மொழியும் பண்டைய செமிட்டிக் மொழியின் இரு கிளைகளே என்றும், 3

இரு நாட்டவரும் பண்டைய செமிட்டிக் இனத்தின் (Semitic race) இரு கிளைகளே என்றும் மேலே குறிப்பிடப்பட்டது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து அராபிய நாட்டினர் பெரும்பாலோர் இஸ்லாம் சமயத்தை ஏற்றுள்ளனர். செமிட்டிக் இனத்தவரைப் பற்றிய குறிப்பு பைபிளில் உலகத் தோற்றத்தைப் பற்றிக் கூறும் 10-ஆம் பிரிவில் கூறப்படுகிறது. செமிட்டிக் மொழியிலிருந்து பிரிந்த மற்றக் கிளை மொழிகள் அசீரியன், அரமேயன் - இதில்தான் இயேசு கிறிஸ்து பேசினார் - பொனிஷீயன், எத்தியோப்பியன் முதலியன ஆகும் அராபியருள் சிலர் கிறிஸ்தவ சமயத்தை ஏற்றுள்ளனர். யூதர்கள் அல்லது ஹீப்ரு மக்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சாராமலும், இஸ்லாமிய சமயத்தைச் சாராமலும், தங்களுடைய கடவுள் ஜெஹோவா (Jehovah) என்றும், அவர் இனி எதிர்காலத்தில் தோன்றுவாரென்றும் நம்புகின்றனர்; யூதர்களிலும் சிலர் கிறிஸ்தவர்களாக இருக்கின்றனர். இயேசு கிறிஸ்துவே ஒரு யூதர் ஆவர். யூதர்களின் பண்டைக் காலத்திய தலைவர் ஆபிரகாம்; அவர் சுமேரியர் யூபிரட்டிஸ் ஆற்றின் கரையில் நிறுவியிருந்த **ஊர்** (Ur) என்ற ஊரின் அரசராக இருந்து ஆட்சி செய்தார்; அகேடிய மக்கள் படையெடுத்து வரவும் (கி.மு. 2750-இல்) ஆபிரகாம் தன் யூத மக்களை அழைத்துக்கொண்டு, மேற்கே சென்று இப்போது ஜூடா (Judah) எனப்படும் கானான் நாட்டில் குடியேறினார். இது பாலஸ்டைனின் தென்பகுதியாகும். ஆகையால் யூதர்கள் பாலஸ்டைனைத் தம் தாய்நாடாகக் கருதுகிறார்கள். யூதர்களுக்கு ஒரு சட்டத் தொகுப்பை மோசஸ் என்பார் வகுத்தார். அதிலுள்ள ஜெருசலேம் நகரில் உள்ள ஒரு குன்று சியான் எனப்படும்; இதில்தான் டேவிட் என்பாரின் அரண்மனையும் கோயிலும் இருந்தன; பண்டை எபிரேய அல்லது யூதர்களின் வழிபாட்டு மையமாகவும், கடவுளுடைய இருப்பிடமாகவும் கருதப்பட்டது. யூதர்கள் அல்லது இஸ்ரேயலைட் மக்களே கடவுளால் சிறந்த மக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (Chosen People) என்று இவர்கள் நம்புகின்றனர். யூதருடைய சமயநெறி ஜூடேயிசம் எனப்படும்.

யூதர்கள் ஜெருசலேம் நகரத்தைப் புனித நிலப்பகுதி (Holy Site) என்றும், அதைக் கோயில் மலை (Temple Mount) என்றும் கூறுகின்றனர் இதேபோல, முஸ்லிம்களும், சிறப்பாக அராபியரும் இந்த நகரத்தை மிக மேன்மையான புனிதத்தலம் (Noble Sanctuary) என்று கருதுகின்றனர். ஆகையால் யூதருக்கும் அராபியருக்கும் இடையேயுள்ள பல பிரச்சனைகளில் இதுவும் ஒன்று. அராபியர் இந்தப் புனித இடம் தங்களுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்றும், இது தங்களுக்கு உரியது என்றும் கூறி மறுக்கின்றனர். கடந்த 2000, செப்டம்பர் மாதம் முதல்

மாதம் நடைபெற்ற அராபிய - இஸ்ரேலியப் போர்களில் 350 பேர் கொல்லப்பட்டனர், அவருள் பெரும்பாலோர் பாலஸ்தீனர் அல்லது அராபியர். இந்த உயிரிழப்புக்கு இஸ்ரேல் பொறுப்பு என்று அராபியக் கழகம் (Arab League) குற்றம் சாட்டுகிறது.

இனி, அராபியர் வாழும் பாலஸ்டைன் பகுதியைப் பற்றியும், யூதர் குடியேறியுள்ள இஸ்ரேல் நாட்டைப் பற்றியும் சிறிது கூறலாம்.

**பாலஸ்டைன் :** முதலாம் உலகப் போர் முடியும் வரை (1918), ஒட்டோமான் துருக்கியப் பேரரசின் ஓர் பாகமாக மத்தியதரைக் கடலின் கிழக்குக் கரையில் (லெவான்ட் கடற்கரை) 10,429 சதுரமைல் பரப்பளவில் அமைந்துள்ளது பாலஸ்டைன் நாடு. இதிலுள்ள ஹீப்ரு அல்லது யூதரும், அராபியரும் பண்டைக்காலத்தில் முறையே அசீரியர், அக்கேடியர் முதலியோராலும், ஆரிய இனத்தவரான பாரசீகர், கிரேக்கர், ரோமானியர் ஆகியோராலும் ஆளப்பட்டு, இறுதியில் ஒட்டோமான் துருக்கியராலும் 1918 வரை ஆளப்பட்டனர்; முதலாம் உலகப் போரில் துருக்கி, பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் எதிராக ஜெர்மானியுடன் சேர்ந்து போரிட்டுத் தோற்றுவிடவே, அதனுடைய மேற்காசிய நாடுகள் எல்லாம் அதனிடமிருந்து எடுக்கப்பட்டு, சர்வதேச சங்கத்தின் சார்பாக பாலஸ்டைனும், இராக்கும் பிரிட்டனின் பொறுப்பாட்சியிலும், சிரியா பிரான்சின் பொறுப்பாட்சியிலும் விடப்பட்டன. 1932-இல் இராக் தனி நாடாயிற்று. 1918-இல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட பால்பர் அறிக்கையின்படி - பிரிட்டனின் பொறுப்பாட்சி, யூதர்களுக்கு ஒரு தனியான தேசியநாடு (national home) பிற்காலத்தில் நிறுவப்படத்தக்க வகையில் அதனுடைய அரசியலும், ஆட்சிமுறையும், பொருளாதாரச் சூழ்நிலைகளை உருவாக்குதல் வேண்டும்; (இவ்வாறு யூதர்களுக்குச் சாதகமாகப் பொறுப்பாட்சி அமைதல் வேண்டுமென்று அறிக்கை கூறியதற்குக் காரணம், போர்க்காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு வெற்றி கிடைத்தாக யூதர் பல்வேறு பயனுள்ள உதவிகளைச் செய்ததுதான்) - பொறுப்பாட்சியில் பாலஸ்டைனில் வாழும் யூதரல்லாத அராபிய மக்களுடைய குடிமை உரிமைகளையும் (civil rights), சமய உரிமைகளையும் பாதுகாத்தல் வேண்டும் இந்த அறிக்கையே யூதர்களுக்கும் அராபியருக்கும் இடையே போரை மூட்டிவிடுதற்குத் தோற்றுவாய் செய்தது எனலாம்.


மேற்குறிப்பிட்ட அறிக்கையின்படி யூதர் ஒவ்வோராண்டிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைப்படி (quota) பாலஸ்டைனில் குடியேறும் உரிமை பெற்றனர். முதலில் (1919-இல்) அராபியரே பாலஸ்டைனில் இருந்த

நிலைமை மாறி வரவரக் குடியேறிய யூதர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தது; ஆகையால் அராபியர் 1921, 1929-ஆம் ஆண்டுகளில் கலகம் செய்தனர் பிரிட்டிஷார் அடக்கினர்; 1930-இல் வெளியிடப்பட்ட சிம்ப்சன-பாஸ்ஃபீல்ட் அறிக்கைகள் யூதர் வருகை நிறுத்தப்பட வேண்டுமென்றும், அராபியரைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு சட்டமன்றத்தை (Legislative council) நிறுவுதல் வேண்டுமென்றும் கூறிற்று ஆனால் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படவும், இந்த முடிவு கைவிடப்பட்டது இதற்கிடையே ஜெர்மனியில் ஹிட்லர் தமது நாசி அரசாங்கத்தை நிறுவி, யூதர்களை விலங்குகளைப் போல் வேட்டையாடி, ஏறக்குறைய 6 மிலியன் யூத மக்களைக் கொன்றொழித்தார், இதனால் அங்கு எஞ்சியிருந்த யூதர்கள் புகலிடம் தேடி பாலஸ்டைனில் குடியேறினர். 1939-இல் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையாவது :-

> பாலஸ்டைனை ஒரு யூதர் நாடாக உருவாக்குதல் வேண்டுமென்பது எங்கள் கொள்கை அன்று; அதே சமயத்தில் அது ஓர் அராபிய அரசாக அமைதல் வேண்டுமென்ற அராபியருடைய கோரிக்கையையும் தள்ளுபடி செய்துவிட்டது. அதனுடைய நோக்கம் ஒரு சுதந்திர அரசு பாலஸ்டைனில் அமைதல் வேண்டுமென்பதே; அதில் இரு சாராருடைய நலன்களுக்கும் பாதுகாப்பு இருக்கும் பொருட்டு அரசாங்கத்தில் இருசாராருக்கும் அதிகாரப் பகிர்வு இருத்தல் வேண்டும்; ஒரு பாலஸ்டைன் அரசு 10 ஆண்டுகளில் நிறுவப்படுதல் வேண்டும்.

இரண்டாம் உலகப்போர் (1939-45) முடிந்ததும், பாலஸ்டைனின் யூதர்கள் அங்கு இருந்த பிரிட்டிஷ் பொறுப்பாட்சிக்கு எதிர்ப்புக் காட்டி, போர்கள் நடத்தினர் பிரிட்டன் பாலஸ்டைன் பிரச்சனையை 1947-இல் ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவித்தது; ஐ.நா சபையின் பாலஸ்டைன் குழு, **முதன்முதலாக பாலஸ்டைன் நாட்டை இருநாடுகளாகப் பிரிவினை செய்தல் வேண்டுமென்று பரிந்துரை செய்ய அதனை ஐ.நா.சபையின் பேரவை ஏற்றுக்கொள்ள, மே14, 1948 அன்று சுதந்திர இஸ்ரேல் அரசு தோன்றிற்று;** பாலஸ்டைனில் இருந்த பிரிட்டிஷ் தூதரும் தம் நாட்டுக்குத் திரும்பி விட்டார்.

புதிய சுதந்திர இஸ்ரேல் நாட்டை அராபிய நாடுகளாகிய எகிப்து, லெபனன், சிரியா, இராக், ஜோர்டன் முதலியவை தாக்கின. 1949 ஜனவரியில் போர் நின்றது; இஸ்ரேல் அராபிய அரசுக்கு ஒதுக்கப்பட்ட



நிலப்பகுதிகள் சிலவற்றைக் கைப்பற்றி, காசா நிலப்பகுதியையும் (Gaza strip) இணைத்துக் கொண்டது. இரு சாராரையும் மத்தியஸ்தம் செய்தற்கு அமர்த்தப்பட்ட, ஐ.நா.சபையின் அரசியல் வல்லுநர் பெர்னடட் என்பவர் ஒரு யூத வெறியனால் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர் அமர்த்தப்பட்ட வல்லுநர் அராபிய-யூதத் தலைவர்களைத் தனித்தனியாக அடுத்தடுத்த இரு அறைகளில் அமர்த்தி தன் வழியாக ஒருவரோடொருவர் (shuttle diplomacy) பேச்சுவார்த்தை செய்தார்; இந்த முறையில் இஸ்ரேலியருக்கும் எகிப்துக்கும் இடையேயும், பின் லெபனனுக்குமிடையேயும், பின் அதற்கும் சிரியாவுக்கும் இடையேயும் தனித்தனியாக ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன; இந்த வெற்றியான முறை அமைதிக்கு அடிகோலியதால், ரால்ஃபுஞ்சுக்கு சமாதானத்துக்குரிய நோபல் பரிசு வழங்கப் பெற்றார். இஸ்ரேல் 1949-இல் ஐ.நா.சபையின் உறுப்பினராயிற்று. இஸ்ரேல் கைப்பற்றிய இடங்களை ஒப்புக் கொண்டு, ஒரு சர்வதேச எல்லைக்கோடு (International Line of Control) வரையப்பட்டது.

இந்த எல்லைக்கோட்டை பாலஸ்டைன் அராபியர் ஏற்க மறுத்ததால்தான் அன்றுமுதல் இன்றுவரை இஸ்ரேலியருக்கும், பாலஸ்டைன் அராபியருக்கும் அவ்வப்போது போர்களும், போர் நிறுத்தங்களும் நடந்து வருகின்றன. *(தொடரும்...)*

# *புறநானூற்றில் இரு மகளிர்*

**-பேராசிரியர் ந. சுப்பிரமணியன்**

புறநானூறு என்னும் சங்கத்தொகை நூல் மக்களது புற (அதாவது அவர்களது உடலுக்கும் உள்ளத்திற்கும் புறம்பாக நிகழும் உலகியல் மற்றும் ஆன்மிக) நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறும் நானூறு பாடல்களின் தொகுதி என்பது தமிழறிஞர் அறிந்தது. அப்பாடல்கள் பொதுவாகவும் பெரும்பாலும் புறநிகழ்ச்சிகளைப் பற்றியே கூறுவனவாயினும் அவற்றில் சில மக்களது உள்ளக்கிளர்ச்சியை ஆய்கின்றனவாகவும் அமைந்துள்ளமை காணப்பெறும். அவற்றில் இரண்டினை ஈண்டுக் காண்போம்.

1. **' மாவாராதே ! மாவாராதே !**

*மாவா ராதே மாவா ராதே*
*எல்லார் மாவும் வந்தன வெம்மிற்*
*புல்லுளைக் குடுமிப் புதல்வற் றந்த*
*செல்வ னூருு மாவா ராதே*
*இருபேர் யாற்ற வொருபெருங் கூடல்*
*விலங்கிடு பெருமரம் போல*
*உலந்தன்று கொல்லவன் மலைந்த மாவே.*

*(எருமை வெளியனார் - புறம் 273)*

கணவன் குதிரையேறிப் போருக்குச் சென்றிருக்கின்றான். மனைவி மனையகத்தே தனித்திருக்கின்றனள்... இல்லை; அவள் தனித்து இல்லை. அவளுடன் அவள் மகன் சிறியன் ஒருவன் இருக்கின்றான் - குதிரையின் தலையாட்டம் போன்ற குடுமி வைத்தவன்[1].

போருக்குச் சென்றவர்கள் எல்லோரும் குதிரையேறித்தான் சென்றார்கள்.

மனைவி வாயிற்புறத்தில் வந்து நின்று பார்க்கிறாள்; குதிரையேறிச் சென்ற கணவன் திரும்பி வரும் வருகையை எதிர்நோக்கி நிற்கிறாள். போய் எவ்வளவோ நேரமாயிற்றே! இன்னும் வரவில்லையே என்று நினைக்கும் எண்ணத்தையும் தாங்க மாட்டாதவள் அவள். அவன் இவர்ந்து சென்ற குதிரை வரவில்லை! மற்ற எல்லோருடைய குதிரைகளும் வந்து விட்டனவே! ஒவ்வொரு குதிரையும் வரவர, வராத ஒரு குதிரையின் நினைப்பு வந்து உறுத்துகின்றது.

(போர் முடிந்து போயிருக்கும் போலிருக்கின்றதே! அப்படியானால்) அந்தக் குதிரை ஏன் இன்னும் வரவில்லை? (எந்தக் குதிரையைப் பற்றிப் பேசிக்கொண்டேயிருக்கிறாள்?) ஓ! இந்தச் சிறுவனை எனக்குத் தந்தவன்; அந்தச் (சிறுவன் தந்தை) செல்வன் ஏறிச் சென்ற குதிரை! 'போருக்குச் செல்வன்' என்று கூறிச் சென்றவன். அவன் செல்வன் அவளுக்கு. சிறுவன் குடுமி குதிரையின் தலையாட்டம் போற் காண்கிறது. (தான் ஏறிச் சென்ற குதிரையின் தலையாட்டத்தைக் காணும்தோறும் இச்சிறுவன் நினைப்பு வந்திருக்குமே! அப்போதாவது அவனை நினைந்தேனும் உடனடியாகத் திரும்பியிருக்க வேண்டுமே!) அந்தக் குதிரை வரவில்லையே!

இரண்டு பெரிய ஆற்று வெள்ளங்களுக்கிடைய அகப்பட்ட ஒரு மரம் என்ன கதியாகும்! (அவ்வாறுதானே இரண்டு பெரிய சேனைகளுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்ட குதிரை பட்டிருக்கும்!) அப்படித் தான் அந்தக் குதிரையும் அகப்பட்டுக்கொண்டு அழிந்து போயிற்றோ? குதிரை வரவில்லையே!

(எவ்வளவானாலும் குதிரை மீதேறிச் சென்றவன் வரவில்லையே என்று கூறாள்; குதிரை வரவில்லையே என்று மட்டும்தான் புலம்புகின்றாள் அவன் வரவில்லை என்பதை நினைத்தால் அதைத் தொடர்ந்து வரும் எண்ணங்களைச் சகிக்க மாட்டாதவள் குதிரையைப் பற்றியே பேசுகின்றாள்!)

'வாராதே' என்னும் சொல்லாட்சிக்கு 'வரவில்லையே' என்பதைவிடச் சற்று உணர்ச்சி அழுத்தம் அதிகம்; 'வரமாட்டேன் என்கிறதே!', என்பது அதன் கருத்து. அது 'வரவில்லை' என்னும் செய்தியை மட்டும் கூறிற்றன்று; அது வராததால் விளைந்த துன்பத்தையும் சுட்டிற்று.

மொத்தம் ஏழடிகள் தாம் இச்சிறு செய்யுள். ஆனால் எழுமை ஏழுபிறப்பும் மறக்க முடியாத சோகத்தைத் தன்னகத்தே அடக்கி நிற்கின்றது.

## 2. 'சிற்றில் நற்றூண்'

*சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்*
*யாண்டுள னோவென வினவுதி யென்மகன்*
*யாண்டுள னாயினு மறியே னோரும்*
*புலி சேர்ந்து போகிய கல்லளை போல*

*வீன்ற வயிறோ இதுவே*
*தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே*

*(காவற்பெண்டு: புறம் - 86)*

இப்பாடல் கூறுவது : ''ஏடா! [1] எனது சிறிய குடிலில் ஈண்டு நிற்கும் இத்தூணைப் பற்றிக் கொண்டு நீ கேட்கிறாய் : 'உன்மகன் எங்குச் சென்றுளன்? 'என்று, அவன் எங்குச் சென்றுளனோ நானறியேன். ஆனால் ஒன்று கூறுவேன்[2] அவனைப் பெற்ற இந்த வயிறு இருக்கின்றதே ![3] அது எத்தன்மைத்து என்றால், புலி வருவதும் போவதும் குன்றில் அமைந்துள்ளதுமான குகை போன்றது. ஆதலால் இப்போது அவன் இருப்பிடத்தை நீ காண விரும்புவையாயின் போர்க்களத்தே போய்ப் பார்!'' என்கின்றாள் அத்தாய்.

இதில் அமைந்துள்ள கருத்து : 'என் மகன் புலி போன்ற வீரன்; பொதுவாக அவன் இருப்பிடம் போர்க்களம் 'என்பது. உவமை : 'புலிவந்து போகும் குகை போன்றது' என்னும் உவகை மிகவும் சிறந்தது. 'நான் வீரத்தாய்; என் வயிறு வீரர்களை ஈனும் வயிறு. இவ்வயிற்றில் பிறந்தவன் நீ தேடும் மகன். ஆதலால் அவனை நீ காண வேண்டுமாயின், வீரர்கள் இருக்கும் இடமான போர்க்களத்தே சென்று பார்! ஈண்டுப்புலி வீரனுக்கும் குகை வயிற்றிற்கும் ஆயின. அக்குகை அப்புலிக்குத் தங்க இடந்தரும் இயல்பிற்று. ஆதலால் 'பத்து மாதம் தங்கி வளர்ந்து ஆண்டு நின்றும் போந்த அவ் வீரமகனது பிறப்பிடம் என் வயிறு' என்று உவமையை விரித்துக் காண்க.

இஃதே போன்றதோருவமையைத் திருவள்ளுவர் மேற் கொள்கிறார் :

*குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே*
*உடம்போ டுயிரிடை நட்பு.* *(குறள்: 338)*

என்றுழிக் குடம்பை உடம்பிற்கும் புள் உயிருக்கும் உவமையாக வந்தன. ஆயினும் அவ்வுவமையை விளக்கவந்த உரையாசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்பது புள்ளின் 'முட்டை' யேயன்றி அதன் 'கூடு' அன்று என்பார். 'குடம்பை என்பதற்குக் கூடு என்று உரைப்பாருமுளர். அது (கூடு) புள்ளுடன் தோன்றாமையின், உடம்பிற்கு உவமையாகாமை அறிக' என்றார். இதனையுட்கொண்டு காவற்பெண்டு கூறும் உவமையை நோக்குங்கால், ஈன்ற வயிற்றிற்குப் புலிவாழ் முழை எவ்வாறு உவமையாகும்? புலி மீண்டும் முழையிற்புகும்; ஆனால் மகன் திரும்ப வயிற்றிற்புகான் ஆதலின்; எனின் அதனை முற்றுவமையாகக்

கொள்ளாமல், 'இருப்பிடத்தினின்றும் வெளிப்போந்து திரிதல்' என்னும் அளவிற்கு மட்டும் உவமை கொள்ளவேண்டும் என்க.

புலி போன்ற வீரமகனை யீன்ற தாயின் வாழிடம் ஒரு சிற்றில்; குடிசை. அதற்கு ஒரு தூண் உண்டு. அஃது அச்சிற்றில்லைத் தாங்கி நிற்கும் ஒரே தூணாதலின் அதனை 'நற்றூண்' என்றார். இனி 'அத்தூணைப்பற்றி' என்றும் ஒரு முக்கியமான சொற்றொடர் பாடலின் முதலடியின் இரண்டாம் சீராக வருகிறது ஈண்டு 'நற்றூணைப் பற்றி' என்று எதற்காகக் கூறுகின்றார்? அஃதாவது 'நான்வரும் போதெல்லாம் இத்தூணைச் சுற்றி விளையாட்டுத் தனமாக நிற்பானே, உன் சிறுமகன் - அவன் எங்கே?' என்று வந்தவன் கேட்பதாகக் கொள்ளுதல் ஒன்று. மற்று, 'உன்மகன் உன் மனையினின்றும் நீங்கி வெளியே சென்றுவிட்டான். ஆதலின் உனக்கு மானுட ஆதரவு பிறிதொன்றின்மையின், வலிமையான இத்தூணைப் பற்றிக் கொண்டு - மகன் உன்னை நீங்கிய வருத்தம் தாங்காமல் நிற்கின்றாயே! உனக்கு ஆதரவாக நிற்கின்றதே அத்தூண் - அத்தகைய நற்றூண்' என்றான் என்க. 'எப்படி ஒரு தூண் ஒரு சிற்றில்லைத் தாங்கி நிற்கின்றதோ அப்படியே உன் மகன் உனக்கு ஆதரவாயமைவான் அவன் ஆண்டில்லாமையால் அதனைப் பற்றி நீ நிற்கின்றாய்' என்றும் விரித்துக் கொள்க.

இனி, 'நற்றூண் பற்று'தலுக்குக் கற்பனை வாயிலானன்றி நேரிடையாகவே பொருள் காண்போம். அஃதாவது வந்தவன், வீரத்தாயை 'நின் மகன் யாண்டுளனோ?' என்று வினவும் போது, சிற்றில்லின் நற்றூணைப் பற்றிக் கொண்டு நின்று கேட்கின்றான் அக்கேள்வியை என்பது ஒரு கருத்து. தூணைப்பற்றுதலாவது, பிறமகளிரோடு புறத்தார் பேசும்போது அவர்கள் அதனையோர் வாயிலாகக் கொள்ளுதல் ஓர் மரபு என்க. ஒரு மனையில் ஒரு பெண் தனித்திருந்தாளாக, அவ்விடம் வந்த விருந்து[4] 'ஆண்மகனாயின் அவன் அவளிடம் நேரிடையாகப் பேசாமல் ஒரு வாயிலை மேற்கொண்டு பேசவேண்டும் என்பது அம்மரபு வந்தவர் மனையகத்திருக்கும் மகளிடம் நேரிடையாகப் பேசுதல் முறையன்று என்று கருதி, அங்குக் காணும் சிலரை நோக்கிப் பேசி அம்மகனுக்குத் தமது கருத்தைத் தெரிவிப்பர் அவ்வாறு சிலர் யாரும் இலராயின், தூண்கள், சுவர்கள் போன்ற அஃறிணைப் பொருள்களையேனும் வாயிலாக விளித்துப் பேசுதல் மரபு இதனை, புறநானூற்றைப் பதிப்பித்த உ.வே சாமிநாதையரவர்கள் 'ஏதாவதொன்றினைச் சார்ந்து நின்று ஒருவரைப் பார்த்தலும் அங்ஙனம் நின்று ஒன்றனைக் கேட்டலும் நாணமுடைய குல மகளிர்க்கு இயல்பு' என்று ஓர் அடிக்குறிப்பில் விளக்கியுள்ளார்.[5]

இப்பாடலின் ஆசிரியரான காவற்பெண்டினைச் சோழன் கோப்பெருங்கிள்ளியின் செவிலித்தாய் என்றும் அப்பதிப்பாசிரியர் கருதுகின்றார்[6]. இங்ஙனம் கருதுதற்கு நூலகத்தே சான்றுளதா என்பதை விளக்குமாறில்லை.

வீரமகன் போர்க்களத்தே பகைவர்களைப் புறங்கண்டு வாகை சூடி வருவான்; மனையகத்திருந்த வீரத்தாய் கவிதையுலகில் பெருவெற்றி பெற்று வாகை சூடுகின்றார் என்பதற்குச் சான்று இப்பாடல் என்க. ஆதலால் இப்பாடல் புறத்திணையில் வாகைத்திணை எனல் பொருந்துமாறு காண்க.

மேற்கண்ட இரு பாடல்களும் யாரோ ஒரு மகன் தனது ஏதோ உருவகத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. முதற் பாடலில் ஒருத்தி, போருக்குச் சென்று திரும்பி வாராத தன் கணவனை எதிர் நோக்கி நின்று கவலையோடு பாடுகின்றாள். இரண்டாவதில், தன் சிறு மகன் மனையை விட்டு வெளிப்போந்து எங்குச் சென்றனன் என்பதை அறியாத ஒரு வீரத்தாய் அவன் போர்க்களத்தே புக்கு வீரமரணம் அடைந்து மாயாப்புகழ் பெற்றிருக்க வேண்டும் என்று நம்புகின்றாள், விரும்புகின்றாள். முதற்பாடலில் கணவன் உயிரோடு திரும்பி வரவேண்டும் என்ற மனையாள் ஒருத்தியின் குரல் கேட்கின்றது. இரண்டாவது பாடலில் தான் பெற்ற மகன் போர்க்களத்தில் வீரமரணமடைந்து இறவாப் புகழ் பெற விழையும் ஒரு மறக்குடி மகளின் வேட்கை புலப்படுகின்றது. மனைவிக்குக் கணவன் உயிரோடு திரும்பிவந்தால்போதும்; தாய்க்குத் தன் மகனைப் பற்றிச் சான்றோனெனக் கேள்வியுற்று, ஈன்ற பொழுதிற் பெரிதுவக்க வேண்டும் என்ற அவா மீதூருகின்றது. 'சான்றோன்' என்னும் சொல் போர் வீரன் என்று பொருள்படும். மனைவியும் தாயும் தமக்கு விருப்பமானவர்களிடம் வெவ்வேறு எதிர்பார்ப்புக்களைத் தோற்றுவது இவ்விரு பாடல்களில் காணப்பெறும்.

## குறிப்புகள் :

**மாவாராதே :** 1) '.... குறுமகப் போலத்தாமும், குடுமித்தலைய மன்ற .. நாடனூர்ந்த மாவே' ஐங்குறுநூறு 202 : 2-4

**சிற்றில் நற்றூண் :** 1) அஃது 'ஏடி'யாகவும் இருக்கலாம். இருப்பின் அக்கேள்வியைத் தொடர்ந்துவரும் வாசகங்களை ஏற்றபெற்றி மாற்றிக் கொள்க.

2) 'ஓரும்' என்னும் அசைச்சொல்லில் இக்கூற்றினை உணர்ந்து கொள்க

3) 'வயிறோ' என்னும் ஓகாரத்தில் 'என்' என்பதை அமைத்துக் கொள்க மற்றும் 'அதைத்தான் இப்பொழுது பார்க்கின்றனையே' என்பது குறிப்பு.

4. விருந்து புதுமை; புதிதாக வந்தவர்.

5. புறநானூறு 85-ம் பாடல்

6. புறநானூறு . இரண்டாம் பதிப்பு - பாடினோர் வரலாறு, பக்கம் 33.

# *புலவர் வறுமையில் பூத்த மலர்*

**இரா. இளங்குமரன்**

ஒரு புலவர் ; பாவன்மை நாவன்மை இரண்டும் ஒருங்கே வாய்ந்தவர். சிந்துப் பாடலுக்கு முந்து நின்றவர்; அவரைப் போலப் பாட முடியுமா எனப் பாவலர்கள் தமக்குள்ளும் தம்மை அடுத்தார்க்குள்ளும் வினாவிக் கொள்ளும் பெரும் புகழாளர்.

அவர் நோயிலும் வறுமையிலும் பட்ட துயர் பெரிது; புலவர் துயர்ப்பாட்டுகளை எல்லாம் அகற்றி விட்டால் உலக மொழிகள் எல்லாமும் ஏறத்தாழ வறண்ட பாலைவனக் காட்சியதாகவே இருக்கும். அவ்வெல்லா வற்றுள்ளும் தமிழ்ப்புலவன் வறுமைப் பாட்டுகளை எல்லாம் அகற்றிவிட்டால் தமிழ்ச்சோலை பன்னீராண்டு வற்கடம் (பஞ்சம்) கொண்டதாகவே இருக்கும்.

வறுமையுற்ற அப் புலவருக்கு நோயும் தாக்கிப் படுக்கையில் வைத்துவிட்டது! பாடும் குயில் படுக்கையில் - நோய்ப்படுக்கையில் கிடந்தால் பாட்டுத் திறமுமா படுத்துவிடும்? அந்நிலைமைதானே பாடல் திறத்திற்கு மேய்ச்சல் நிலம்! அதனால் பாடினார்.

அவர் இளந்தைப் பருவத்திலே ஐந்திலக்கணம் கற்றதுண்டு; பலர்க்குக் கற்பித்த துண்டு; அவ்விலக்கணம் செறிய பல ஆயிரம் பாடல்கள் பாடிய துண்டு. அவ்விலக்கணம், படுக்கைப் படுத்திய நோயிலும் வறுமையிலும் கூத்தாடலாயிற்று.

எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்து இலக்கணப் பெயரையே சொல்லிச் சொல்லிச் சுவைப்பாகை வடிப்பார் போலப் பாடினார். அவர் அத்துயர் படாக்கால் அச்சுவைப் பாடல் தமிழ் மண்ணுக்கு வாய்த்திராது புலவா வறுமையின் பொலிவாகத் திகழ்கிறது அப்பாட்டு

முதல இலக்கணம் எழுத்து அல்லவா!
எழுத்திலே கையெழுத்து கல்லெழுத்து என்பவை மட்டுமா?
தலை எழுத்து என ஒன்று சொல்லி வைத்திருக்கிறார்களே!
அத்தலை எழுத்தின்படி பிறந்தாராம்!

**அவர் பட்ட துயரத்திற்கு அளவில்லையாம்! அவர் கற்ற கேட்ட சொற்களை எல்லாம் திரட்டி வைத்துச் சொல்ல நினைத்தாலும் அச் சொல்லில் அடங்கி விடாதாம். 'மண்தேய்த்த புகழ்' என்றும் 'புலவரை இறந்த புகழ்' என்றும்**

சொல்வார்களே; அதுபோல் அவர் பட்ட துன்பம் சொல்லுக்கு அடங்காதாம். இது இரண்டாம் இலக்கணம் தானே (சொல்)

அந்த வறுமைக்கு அடிமூலம் என்ன? பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை ''பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள்'' என்பவை பொருள் மொழிகள் அல்லவா! இல்லாமை மட்டும் இல்லை! கட்டாயம் செலவழித்து கடன் உடன் பட்டுச் செலவழித்து ஆக வேண்டிய நிலை! இது மூன்றாம் இலக்கண நிலை (பொருள்). நான்காம் இலக்கணம் என்பது 'யாப்பு' அல்லவா!

புலவர்க்கு வந்த நோய்ப் பெயர் யாப்பு! அரையிலே - இடையிலே - வரும் யாப்புக்கு என்ன பெயர் சூட்டினர் நம் முன்னோர்? அரை யாப்பு என்றனர். முழு யாப்பு வல்லார் இவரை அணுகுதல் ஆகாது என நினைக்குமா அரையாப்பு! அது குடி கொண்டு படுக்கையில் வைத்து விட்டது.

அரையாப்பினை புலவர் நா, நயமாக நவில்கின்றது! 'நாலில் பாதி' என்பது அது. நான்கு என்பது யாப்பு; பாதி - அரை ; அரையாப்பு நாலில் பாதியாய் நளிநயம் காட்டுகின்றது. (நளிநயம் - நளினம்)

ஐந்தாம் இலக்கணமாவது அணி· வறுமைப் புலவனுக்குச் சொல்லணி, பொருளணி யன்றி பொன்னணி, முத்தணி, வயிர அணி இருக்குமா? இருந்தால் தான் விலைக்குப் போயிருக்குமே!

புலவர் பெருமிதமாகச் சொல்கிறார் . பஞ்சம் என்பது ஏதும் இல்லையாம்1

பஞ்சம் இல்லையா? பஞ்சப் பாட்டு தானே இது! பின் புலவர் சொல்லும் பஞ்சம் என்பது ஐந்தாம் இலக்கணமாம் அணி.

பஞ்சம் ஏதுமில்லை என்றவர் சொல்லோடு விளையாடத் தொடங்கிவிட்டார்.

ஓதும் இல்லை இகந்துதெரு உலவுதற்கும் ஏதுவில்லை.

இல்லத்தைக் கடந்து தெருவில் உலவுதற்கும் வாய்ப்பு (ஏது) இல்லையாம்! அவர் பாட்டு இது:

*"ஆதிஇலக் கணப்படியே உதித்திரண்டிற்கு அடங்காத்துன்பு*
*ஆக்கி மூன்றை*

*மேதினியிற் பலவிதமாச் செலவுசெயுமாறு புரிவித்தநாலிற்*
*பாதியினால் யான்பட்ட பாடுசொல முடியாது; பஞ்சம் என்பது*
*ஏதுமில்லை; ஓதும்இல்லை, இகந்துதெரு உலவுதற்கும் ஏது இல்லை".*

அவர் அவர் எனின், அவர் எவர்?

சிலருக்கு முகப்புச் செய்திகளால் புரிந்திருக்க வாய்ப்புண்டு:

ஒருசிலர் இப்பாடலைப் படித்தும் கேட்டும் இருக்கலாம்.

இப்புலவர், காவடிச் சிந்துக்கு ஒப்பிலாப் புலவராகிய **சென்னிகுளம் அண்ணாமலை (ரெட்டியார்)** ஆவர்.

# நெஞ்சோடு தலைமகன்
## - பேரறிஞர். க.கனகராசு

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அகம் என்பது ஒருவனும் ஒருத்தியும் மனதளவில் உய்த்துணரக்கூடிய அறிவாகும், அது துய்த்தவரும் இன்னவாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூற இயலாதது ஆகும் எனவே நெஞ்சுக்குச் சொல்வானாய்க்கூறும் திறன் எண்ணி எண்ணி மகிழற்குரியது.

புணரவரும் தலைமகன் வல்வில் ஓரியின் கொல்லிப் பாவை போலக் கண்டார்க்கு மடமை வரச் செய்பவள், பெறுவதற்கு அரியள், (குறு.100) என்கிறான். முன்னர் துய்த்த இன்பத்தை நினைந்து மீண்டும் கூடி அவ்வின்பத்தைப் பெற முனைகிறது அவன் மனம்

பொருள் இல்லாதான் இவ்வுலக இன்பங்களை நுகர விரும்பியதைப்போல நீயும் விரும்புகின்றாய். தலைமகன்,

*"நல்லோள் ஆகுதல் அறிந்தாங்கு*
*அரியள் ஆகுதல் அறியா தோயே"* *(குறு.120, 3-4)*

என்று இன்னலுறும் நெஞ்சுக்கு மொழிகிறான்.

இற்செறிப்புத் தலைமகளைக் கூடப்பெறாத தலைவன் இவள் நட்பால் உண்டாய நோய்,

*"இறு முறை எனவொன் றின்றி*
*மறுமை யுலகத்து மண்ணுதல் பெறுமே"* *(குறு.199, 7-8)*

என்று பிறப்புதோறும் தொடரும் என்கிறான். இதில் மறுமையிலும் அவளோடு இணைய விரும்பும் அவன் விருப்பினை உணரமுடிகிறது.

தலைமகளைக் கூடப்பெறாது கழியும் நாட்களைப் பதடி வைகலாய்க் கருதும் தலைமகன், புணர்ந்து நீங்கும் சூழலிலும், புணர விரும்பிய சூழலிலும் தலைமகளின் அழகு நலன்களைப் புகழ்தலையும், அந்நலன்களால் தான் பெற்ற இன்பங்களை நினைவு கூர்தலையும் காணமுடிகிறது.

### பிரிவை முன்னிறுத்திய நெஞ்சுக்குக் கூறியவை :

பிரிவு வலித்த நெஞ்சோடு தலைமகன் பேசுபவை, பிரிய விரும்பும்

நெஞ்சினைத் தெருட்டுபவை, செலவைத் தவிர்க்க வேண்டும் என்ற அவனது விருப்பத்தை வெளியிடுபவை.

பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பம் இல்லை ஆதலாலும், பொருளே ஒருவனைப் பொருளாகப் பண்ணும் என்பதாலும், வினையே ஆடவர்க்கு உயிர் எனப்படுவதாலும், தலைமகன் உள்ளம் தலைமகளைப் பிரிந்து பொருளீட்ட எண்ணுகிறது. அவன் உடலோ இம்மை உலகத்தில் நிலையாதது, மறுமை உலகிற்குப் பயன்படாதது பொருள் என்று பிரிய மறுக்கிறது. உடல் வேட்கை, உள்ள வேட்கை ஆகிய இரண்டுக்குமான முரண்பாட்டை இப்பாடல்கள் புலப்படுத்துகின்றன.

தலைமகள் தரும் இன்பத்தை எடுத்துரைத்தல், அவளைப் பிரிய இயலாத நிலையை விளக்குதல், பொருளின் நிலையாமையைச் சுட்டுதல் இப்பகுதியில் சொல்லப் பெறுகின்றது.

இப்பாடல்களில் பிரிவதால் பெறும் பொருள் வளமும், பிரியாது பெறும் இன்பநலமும் ஒப்பிடப் பெறுகின்றது.

குறுந்தொகையில் பிரிவுவலித்த நெஞ்சுக்குத் தலைமகன் கூறுவதாக 9 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரு பாடலில் தலைமகன், கல்கெழு கானவர் நல்குறுமகள், உறுதோர் உயிர் தளிர்ப்பத் தீண்டலால் அமிழ்தம் போன்றவள், இம்மை, மறுமை என்னும் இருமைக்கும் இன்பம் நல்கும் பொருளும் அமிழ்தமும். எனவே இவளை விடுத்துப் போய்ப் பெறும் பொருள் யாதுளது? என்கிறான்.

பொருள்தரும் இன்பத்தினும் இவள்தரும் இன்பம் பெரிதும் மகிழ்வைத் தருவது என்பதுணர்த்த,

*"அரும்பிய சுணங்கின் அம்பகட் டிளமுலைப்*
*பெருந்தோள் நுணுகிய நுசுப்பிற்*
*கல்கெழு கானவர் நல்குறு மகளே"* *(குறு. 71, 2-4)*

என்று பாராட்டுகிறான்.

வறியோர் இன்மை தீரக் கொடுத்தலும் ஐம்புல இன்பங்களை நுகர்தலும் பொருள் இல்லோர்க்கு இல்லை என்று, பொருள் செய்தற்குரிய தொழிலையே மிகுதியும் எண்ணுகின்ற நெஞ்சிடம்,

*"அவ்வினைக்கு, அம்மா அரிவையும் வருமோ*
*எம்மை உய்த்தியோ உரைத்திசின் நெஞ்சே"* *(குறு. 63, 3-4)*

என்று வினவுகிறான். தலைமகளைப் பிரிய இயலாமையைப் புலப்படுத்துகின்றான். பொருள் பிரிவில் அவளும் உடன் வருவாளாயின் நலமாம் என்பான்.

''நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே'' (குறு. 347, 6) என்று தன் விருப்பத்தை வெளியிடுகிறான்.

வேனிற்காலத்தில் தண்மையும், பனிக்காலத்தில் வெம்மையும் விரும்புவது மக்களியல்பு. தலைமகளோ வேனிலில் பொதியமலையில் தோன்றிய சந்தனத்திலும் தண்மை மிக்கவள், பனிக்காலத்திலோ தாமரை மலரின் உள்ளகம் போன்று சிறிய வெம்மையும் உடையவள். ஆகவே தலைமகன் தனக்குத் தேவையான தண்மையும், வெம்மையுமாய்த் தலைமகள் இருப்பதைச் சுட்டிப் பிரிய இயலாதென்கின்றான். ( கு று ந் . 376)

நெஞ்சை,

*''குன்றுகெழு சிறுநெறி அரிய என்னாது*
*மறப்பருங் காதலி யொழிய*
*இறப்பல் என்பது ஈண்டு இளமைக்கு முடிவே''* *(குறுந். 151. 4-5)*

கழிந்த இளமையை மீண்டும் பெற இயலாது. ஆதலின் பிரியின் பொருளீட்டுங் காலத்து இளமை கழியுமே என்று இரங்குகிறான்.

நறுந்தண்ணியள் ''நல்மாமேனியள், பணைத்தோளினள்'' என்று அவளிடம் பெற்ற இன்ப நலனை நினைவு கூர்ந்து, இத்தகையாளைப் 'பிரியின் வாழ்தல் இலமே'' என்றும் பிரிதலருமை சுட்டுகிறான். (குறு. 168)

முன்தோன்றினாரை முன்னர் கொல்லலும், பின்னர் தோன்றினாரைப் பின்னர் கொல்லலும் ஆகிய மரபின்றிக் கொல்வது கூற்றின் தொழில். இளையார், மாதர், அறிஞர் என்ற கண்ணோட்டமின்றிக் கொல்லும் அறனில்கோள். எனவே இத்தகைய கொலைத் தொழிலை நன்குணர்ந்தவர்கள், உலகத்துப் பயன்மிக்க வளமெல்லாம் ஒருங்கே ஒருபொழுதிலே கிடைப்பதாய் இருப்பினும்,

*''கரும்பின், கல்லெறி கடிகைக் கணையின் றன்ன*
*வாலெயிறு ஊறிய வசையில் தீம்நீர்க்*
*கோலமைக் குறுந்தொடிக் குறுமகள் ஒழிய*
*ஆள்வினை மருங்கிற் பிரியார்''* *(குறு. 267, 2-6)*

இவ்வாறு தலைமகன் இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பதை உணர்த்தத் தலைமகளைப் பிரிதல் நன்றன்று என்று நெஞ்சுக்கு வலியுறுத்துகின்றான்.

ஓரிடத்தில் பொருளின்பத்தையும் தலைமகளிடம் பெறும் இன்பத்தையும் ஒப்பிட்டுக் கூறும் திறம் எண்ணத் தக்கது.

கடல்சூழ் உலகில் பெறும் இன்பம் பொருளால் ஆனது, பொருள் உள்ளளவு மட்டும் பெறக்கடவது.

வானவர் உலகத்தில் பெறும் இன்பம் செய்த அறத்தால் எய்தப் பெறுவது, அறப்பயன் உள்ளளவு மட்டும் பெறக்கூடியது. ஆனால் தலைமகளின் தோளோடு தோள் மாறுபட்டுத் தழுவிப்பெறும் இன்பமோ அன்பால் கிடைப்பது, இறப்புவரை தொடர்வது, எனவே நெஞ்சிடம்,

*"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்*
*அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்*
*இரண்டுந் தூக்கிற் சீர்சா லாவே*
*பூப்போல் உண்கண் பொன்போல் மேனி*
*மாண்வரி அல்குல் குறுமகள்*
*தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே"* *(குறு. 101)*

என்று ஒப்பிடுகிறான். இதில் பொருளின்பம், அறத்தால் வருமின்பம் இரண்டினும் மிக்க இன்பமுடையதாய்த் தலைமகள் தருமின்பம் அமைகிறது

தலைவன் தன்னெஞ்சோடு பேசும் பேச்சுக்கள் தன் ஆழ் மனவுணர்வை வெளிப்படுத்துபவை.

புணர்ச்சியை முன்னிறுத்திய கூற்றுக்கள் தலைவியின்பால் பெற்ற இன்பத்தை நினைவு கூர்பவை, அதை மீண்டும் மீண்டும் பெறவேண்டும் என்ற விருப்பத்தை வெளியிடுபவை.

பிரிவை முன்னிறுத்திய நெஞ்சோடு பேசுபவை, தலைவியைப் பிரிய இயலாமையைப் புலப்படுத்துபவை. பொருளின்பத்தினும் பிரியாது கூடிப்பெறும் இன்பம் மிக்க மகிழ்வளிப்பது என்று ஒப்பிடுபவை.

பின்னதில் கவிஞன் கூற்றுமுறையில் நெஞ்சை முன்னிலைப் படுத்திக் கூறுவனவாய் அமைந்துள்ள பாடல்கள் சமூக மதிப்பைக் கருதும் உள்ளத்திற்கும், தன் இன்பத்தைக் கருதும் உடலுக்குமான முரண்பாட்டைத் தெளிவுபடச் சொல்பவை எனில் மிகையன்று.

# வடசொற் கிளவி

## டாக்டர். அ.மா. பரிமணம்

காலப் பழமையும், இலக்கிய இலக்கண வளங்களும் நிறைந்து இன்றும் மக்கள் வழக்கில் நிலைத்து வாழும் உலக மொழிகள் சிலவற்றுள் தமிழ் மொழி ஒன்றாகும். கிடைத்துள்ள தமிழ் நூல்களில் முற்பட்டதும் முழுமையுற்றதுவுமாகக் கிடைத்திருப்பது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். அது, மக்கள் வழக்கு செய்யுள் வழக்கு ஆகிய இரு வகை வழக்கிலும் தமிழ் மொழியின் இயல்பினை விளக்கும் இலக்கண நூலாக மட்டுமன்றி, அம்மொழியின் தனித்தன்மையினைத் தன் ஆணையால் போற்றிக் காக்கும் காப்பு நூலாகவும் திகழ்கின்றது; அதனால் தமிழ் இனத்தின் பண்பாட்டினை உணர்த்தி நிற்கும் கருவியாகவும் திகழ்கின்றது.

தமது தாய்மொழியாதலின், தமிழ் மொழியின் நிலைபேறு, வளர்ச்சி, காப்பு ஆகியவற்றிற்கான விதிமுறைகளைத் தம் முன்னோர் காட்டிய மரபின் நின்று இலக்கணப்படுத்தி நூலாக்கிச் சென்றுள்ளார் தொல்காப்பியர். மக்கள் வழக்கில் மட்டுமன்றிக் காலங்கள்தோறும் நிலைத்து நின்று பயன் விளைப்பதொன்றாகலின், செய்யுளுக்கெனத் தனியே ஓரியல் வகுத்து அவர் தம் இலக்கண நூலினை அமைத்துள்ளார். அச்சிறப்புக் கருதி, எழுத்து, சொல் ஆகியவற்றின் இலக்கணங்கூறும் இரு அதிகாரங்களிலும், செய்யுளுக்குரிய விதிகள் என்று சுட்டிச் சில நூற்பாக்களை அமைத்துள்ளார். வணிகம், அரசியல், சமயம் போன்ற காரணங்களால் தமிழ்மக்கள்,தமிழல்லாத பிறமொழிகள் வழங்கும் நாட்டு மக்களொடு தொடர்புகொள்ள வேண்டிய நிலைமையின் இன்றியமையாமையினை உணர்ந்த தொல்காப்பியர் பிறமொழிச் சொற்கள் தமிழில் கலக்கும் நிலையினைத் தவிர்க்க வியலாத நிலையில் அவை எப்படித் தமிழில் இடம் பெறக்கூடும் என்பதனை வரையறுத்து இலக்கணம் அமைத்துள்ளார். அது தமிழ்மொழியின் தனித் தன்மையினைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட காப்பு வேலியாகத் திகழ்கின்றது. பிற மொழிச் சொல் தமிழில் புகுவது போலத் தமிழ்ச் சொற்களும் பிறமொழிகளில் புகும் வாய்ப்பு நிரம்ப இருந்துளது. அதற்கான வழி வகைகளை வகுப்பது அவ்வம் மொழிக்காவலர் தம் (இலக்கணிகள்) கடமையாதலின் அதுபற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறிற்றிலர். தமிழ் மொழியும் குறிப்பிடத்தக்க அளவிற்குப்

பிறமொழிகட்குச் சொற்களை வழங்கியுள்ளது என்பது நினைவு கூரத்தக்கதாகும். தமிழ்மொழி, பிறமொழிச் சொற்களின் கலப்பில்லாமல் தனித்து வழங்கவல்ல சிறப்புடையது என்பதனை டாக்டர் கால்டுவெல், மொழிநூல் அடிப்படையில் மேற்கொண்ட ஆய்வின் பயனாகத் தமிழகம் உணரத் தலைப்பட்டது. பிறமொழிச் சொற்களின் கலப்பகன்ற தமிழில் எழுதுதற்கான ஆர்வமும் முயற்சியும் இன்று தமிழறிஞர்கள்பால் முகிழ்த்திருப்பது போற்றத்தக்கதாகும். இந்நிலையில் தொல்காப்பியர் மொழிக் காப்பாக அமைத்த விதியினை அறிவது இன்றியமையாததாகும்.

மொழியில் வெளிப்படும் கருத்து, நிலைபெறுவதற்குப் பேச்சு வழக்கினும் செய்யுள் வழக்குச் (வரி வடிவ வழக்கு) சிறந்த கருவியாக அமைவதனால், அதன்கண் இடம்பெறும் சொற்கள் பற்றித் தனியே விதந்து கூறவேண்டிய தேவையினை உணர்ந்து தொல்காப்பியச் சொல்லதிகார ஈற்றியலான எச்சவியலின் தொடக்கத்தில் அதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். அந்நூற்பா, ''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று, அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே'' என்பதாகும் (தொல்-சொல்-எச்சம்-1). இதன் பொருளைச் சிந்திக்கு முன்னர், மனத்திற் கொள்ள வேண்டிய கருத்தொன்றுண்டு. இன்று கிடைக்கும் தொல்காப்பிய உரைகளுள் காலத்தால் பழமை சான்றது இளம்பூரணர் உரையாகும். அவருக்கு முன்னரும் உரைகள் இருந்துள என்பதனைப் பூரணர் உரையால் அறிதல் கூடும். சில ஆயிர ஆண்டுகட்கு (ஏறத்தாழ 3 ஆயிரங்கள் ) முற்பட்டுத் தோன்றிய மொழி இலக்கண நூல் ஒன்றினுக்கு (தொல்காப்பியம்), இன்றைக்குச் சில பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட உரை நூல்களில் வேறுபாடுகள் தோன்றுவது இயல்பாகுமென்பதனையும், அவ்வுரையாளர்தம் கருத்துக்களிற் சில நூலாசிரியர் கருத்திற்கு மாறுபட அமையும் வாய்ப்புள்ளது என்பதனையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

இந்த அடிப்படையில் முற் கூறப்பட்ட நூற்பாவிற்கு உரையாளர் பலரும் கூறிய உரையினை ஒருங்கே நோக்குவது பயனுடையதாகும்

## நூற்பாக் கருத்து:

**இளம்பூரணர்** : '' இத்துணைப் பட்ட சொல்லினாற் செய்யுள் செய்யப் பெறும்''.

**சேனாவரையர்** : ''செய்யுட்குரிய சொல்லும் அவற்ற திலக்கணமும்''' உணர்த்தல்.

**<u>நச்சினார்க்கினியர்</u>** : "செய்யுட்குரிய சொற்கள் இவையென அவற்றின் வரையறை"

**<u>தெய்வச்சிலையார்</u>** : "ஒரு வகையால் செய்யுட்குரிய சொல்லின் பாகுபாடு"

**<u>வெள்ளைவாரணர்</u>** : செய்யுட்குரிய சொல்லும் அவற்ற திலக்கணமும்

இந்த நால்வர் கூறியுள்ள நூற்பாக்கருத்தில், வாசக வேறுபாடன்றிப் பொருள்வேறுபாடு இல்லாமை குறிப்பிடத்தக்கது.

## பொருள்

செய்யுட்கண் இடம் பெறுவனவாகக் கூறப்பட்ட இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனும் நால்வகைச் சொற்களில் முதலிருவகைச் சொற்களின் பொருள் பற்றி உரையாளர்களிடம் பெருமளவில் வேறுபாடில்லை. எனினும் 'செந்தமிழ் நிலம்' என்பதனை நினைந்து பிற்றைநாள் உரையாளர் சிலர் 'கொடுந் தமிழ் நிலம்' என்பதும் உண்டு எனக் கருதினமையால் தமிழ் வழங்குநிலம் பற்றிய கருத்தில் வேறுபாடு தோன்றலாயிற்று. தொல்காப்பியர், குறிப்பிட்ட, 'செந்தமிழ்' என்பதனைச் 'செஞ்ஞாயிறு' போலக் கருதாமல், செந்தாமரை போல (இனம் சுட்டும் அடைகொண்டது) அவ்வுரையாளர்கள் கருதினமையே வேறுபாட்டிற்குக் காரணமாகும். அதன் விளைவாகச் செந்தமிழ் நிலம், கொடுந்தமிழ் நிலம் பற்றிய வரையறைகளிலும் வேறுபாடுகள் தோன்றலாயின. செந்தமிழ் நாடு பற்றிய வேறுபாட்டினைப் பின்வரும் மேற்கோள் செய்யுட்களால் அறியலாம்.

பாண்டி நாடே செந்தமிழ் நாடு என்பார்,

*"செந்தமிழ் நாடே,*
*சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனும்*
*சௌந்தர பாண்டியன் எனும்தமிழ் நாடனும்*
*சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்*
*மங்கலப் பாண்டி வளநாடென்ப" என்றும்*

சோழ நாடே செந்தமிழ் நாடு என்பார்,

*"செந்தமிழ் நாடே,*
*மன்ற வாணன் மலர்திரு வருளால்*
*தென்தமிழ் மகிமை சிவணிய செய்த*
*அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்*

*படியின் மாப்பெருமை பரவுறுசோழனும்*
*சைவ மாதவரும் தழைத்தினி திருக்கும்*
*மையறு சோழ வளநா டென்ப"*

என்றும் அமைந்த பாடல்களைக் காட்டுவர். செந்தமிழ் நாட்டினையடுத்து விளங்கும் கொடுந்தமிழ் நாட்டுப் பகுதிகள் பன்னிரண்டென்று கொண்டு, அவற்றைத் "தென் பாண்டிகுட்டம்" எனத் தொடங்கும் வெண்பாவிற் பட்டியலிட்டுக் காட்டுவர். அகத்தியனைச் 'செந்தமிழ் முனிவன்' எனக் கூறியது கொண்டு, 'கொடுந்தமிழ் முனிவன்' ஒருவன் இருத்தல் வேண்டும் என்று கருதிப் பிறனொரு முனிவனை எவரும் கூற முற்படாமை குறிப்பிடத்தக்கது!

இவ்வாறெல்லாம் செந்தமிழ் கொடுந்தமிழ் நிலங்கள் பற்றிக் கூறப்பட்டவற்றை உடன்படாமல், மறுத்துக் கூறுகின்றவர்களின் கருத்தை ஏற்றுத் தெய்வச் சிலையார் கூறும் கருத்து ஏற்புடையதாகும். அது

*"வடவேங்கடம் தென்குமரி,*
*ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து*
*வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்*
*எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"*

எந்றமையாலும், இதனுள் தமிழ்கூறும் நல்லுலகமென விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறாது தெற்கெல்லை கூறியவதனால் குமரியின் தெற்காகிய நாடுகளை ஒழித்து வேங்கடமலையின் தெற்கும், குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும் குடகடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நிலம் என்றுரைப்ப.. " "இவை (இயற்சொற்கள்) அந்நிலத்துப்பட்ட எல்லா நாட்டினும் ஒக்க இயலின் இயற் சொல்லாயின. இவற்றைச் செஞ்சொல் எனினுமையும்".

வேங்கடத்திற்கு வடபால் உள்ள நாட்டுப் பகுதி வடுகு (தெலுங்கு) வழங்கும் நிலமாதலின் அது, 'மொழிபெயர் தேஎம்' (வடுகர், பிழிஆர் மகிழர் கலி சிறந்தார்க்கும் மொழிபெயர்தேஎம் இறந்தனர் ஆயினும்' - அகம் 295 : 15 - 17) எனப்படும். கருநடம் (கன்னடம்), துளு ஆகிய மொழி வழங்கும் பகுதிகளும் தமிழகத்திற்கு அப்பால் - வடதிசையில் - உள்ளனவேனும், அம்மொழிகள், மொழிக் குடும்ப வகையில் திராவிட மொழிக்குழுவில் அடங்குவனவாதலின், அவற்றை வட (திசை) மொழி என்று பண்டைத் தமிழர் குறிப்பிடவில்லை. விந்தியத்திற்கும் வடபால் விளங்கும் இந்தியப் பகுதிகள் பலவற்றில் வழங்கும் மொழிகள் நால் வேதமொழியாக விளங்கும் சமசுகிருதத்தோடு, (ஆரியமொழி) தொடர்புடையனவாதலின் அம்மொழிகளே 'வடமொழி' என்று பண்டைத்

தமிழிற் குறிப்பிடப்படடன. புத்த சமயத்திற்கும் சமண சமயத்திற்கும் வழக்கு மொழிகளாக முறையே விளங்கிய பாலிமொழியும் பிராகிருத மொழியும் சமசுகிருத (வேதமொழி) மொழியொடு மிகுந்தஅளவில் தொடர்புடையனவாகும். ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும்'' உலகின் (தமிழகம்) கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய திசைகள் கடற்பரபாக விளங்கியமையால் அத்திசைகளிலிருந்து தமிழிற் சொற்கலப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை வேங்கடத்திற்கு வடக்கே வழங்கிய வடுகு, கருநடம், துளு போன்ற மொழிகள் ஒரு குடும்பத்தைச் சார்ந்தனவாதலின் அவற்றைத் திசைமொழி என்றும், மொழிக்குடும்ப வகையாலும் நெடுந்தொலைவு வடதிசையில் அமைந்தமையாலும் சமசுகிருதம், பாலி, பிராகிருதம் போன்றவற்றை 'வடமொழி' என்றும் தொல்காப்பியர் தம் மொழிக் காப்பு நூற்பாவில் சுட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அரசு, சமயம், கலைகள், வணிகம் போன்ற காரணங்களால் வடமொழிகள் வழங்கும் நாடுகட்கும் தமிழகத்திற்கும் பண்டைக் காலத்தே தொடர்பு இருந்துள்ளதனைச் சங்க நூல்களைப் பயில்வோர் உணர்வர். நால் வேதங்களை அடிப்படையாகக் கொண்ட வைதிக நெறி முதற்கண்ணும், அடுத்துப் புத்த நெறியும், சமண நெறியும் தமிழகத்தில் பரவிக் கால் கொள்ளலாயின. அதனால் முதற்கண் வேத-வைதிக-மொழியாகிய சமசுகிருதமும் பின்னர்ப் பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளும் தமிழகத்தில் கற்கப்படுவனவாயின. அதன் விளைவாகத் தமிழ் மொழிக்கண், வடபுலமொழிகளின் சில சொற்கள் இருவகை வழக்கிலும் இடம்பெற்றன. யூபம், பிடகம், கண்ணன் போன்ற சொற்கள் சங்கப் பாடல்களில் இடம்பிடித்துள்ளன. அவற்றை முறையே சமசுகிருதம், பாலி, பிராகிருதச் சொற்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இருவகை வழக்கிலும் வழங்கிவரும் ஒரு மொழியிற் பிறமொழிச் சொற்கலப்பு இன்றியமையா நிலையில் அரிதாக இடம்பெறும் உண்மையை உணர்ந்த தொல்காப்பியர், தம் தாய்மொழியாகிய தமிழின் செம்மையும் இயல்பும் கெடாமை கருதித் தமிழ் ஒலியல்லாத பிற ஒலியுடைய சொற்கள் புகுந்துவிடாமல் தம் ஆணையால் மொழிக்காப்புச் செய்துள்ளார். அவ்வகையால், தமிழ்மொழியின் முதற்காவலர் தொல்காப்பியரே எனல் தகும்.

திசைச் சொல்லை விளக்கும் தொல்காப்பிய நூற்பாவில் உள்ள 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' (தொல்.சொல்.400) என்னும் தொடருக்குப் பிற உரையாளர் தம் உரைகளிலும் வேறுபட்டு

*நச்சினார்க்கினியர்*, ''செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும், பன்னிரண்டையும் புறஞ்சூழ்ந்த பன்னிரண்டு நிலத்தும்'' என்று பொருள் கூறியுள்ளார். அவற்றிற்கு எடுத்துக்காட்டாகப் பொங்கர் நாடு ஒளிநாடு முதலிய பன்னிரண்டு நாடுகளைக் கூறி அவற்றைத் ''தென் கீழ்பால் முதலாக வடகீழ்பால் ஈறாக எண்ணுக'' என்று குறிப்பிட்டுள்ளார். பன்னிரண்டையும் சூழ்ந்த பன்னிரண்டு என்பதற்குச் சிங்களம், பழந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளு, குடகம், கருநடம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அவற்றிற் சிலவற்றிற்கு, தமிழில் வழங்கும் அந்தோ (சிங்களம்), கரைய, சிக்க (கருநடம்), செப்பு (வடுகு), பாண்டில் (எருது) தெலுங்கு, மா (கொக்கு) (துளு) என எடுத்துக் காட்டும் தந்துள்ளார். (வடுகும் தெலுங்கும் ஒன்றெனக் கருதவும் படும்). இவற்றையெல்லாம் ஒருங்கே நோக்கும்போது, *திசைச்சொல்லாகக்* கூறப்பட்ட சொல் வழங்கும் நிலமனைத்தும் விந்தியமலைக்குத் தென்பால் அமைந்தன என்பது புலனாகும்.

இனி, செய்யுட்குரியனவாகக் கூறப்பட்ட வடசொற்கள் தமிழில் வழங்குமாறு பற்றித் தொல்காப்பியர் கூறிய விதியினையும் அதற்கு உரையாளர்கள் கூறியுள்ள உரை விளக்கங்களையும் நோக்குவோம்.

*''வடசொற்கிளவி வடஎழுத்து ஒரீஇ,*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''*

என்பது நூற்பா (தொல்.சொல்.எச்சம். 395 இளம்பூரணம்)

**உரைகள் :**

**1. <u>இளம்பூரணர்</u>** : வடசொற் கிளவி என்று சொல்லப்படுவது ஆரியத்திற்கே உரிய எழுத்தினை ஒரீஇ, இரு திறத்தார்க்கும் பொதுவாய எழுத்தினை உறுப்பாக உடையவாகும் சொல். எடுத்துக்காட்டு . மூலகம், குங்குமம், நரகுணம்.

**2. <u>சேனாவரையர்</u>** : வடசொற் கிளவியாவது வடசொற்கே *உரியவெனப்படும் சிறப்பெழுத்தின் நீங்கி,* இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம். பொது எழுத்தான் இயன்ற வட சொல்லும் செய்யுட் செய்தற்குச் சொல்லாம். அவை வாரி, மேரு, குங்குமம், மணி, என்னும் தொடக்கத்தன.

3. ***நச்சினார்க்கினியர்*** : வடசொல்லாகிய சொல், உரப்பியும் எழுத்தும், **கனைத்தும் கூறும் வட எழுத்துக்களின் நீங்கி இருசார் மொழிக்கும்**

பொதுவாகிய எழுத்தான் இயன்ற சொல்லாம். அவை, வாரி,மேரு, குங்குமம், மணி, மானம், மீனம், வீரம்... என்றாற்போலச் சான்றோர் செய்யுட்கண் வருவன. இனி ஒழிந்தோர் ... இவை போல்வன பிறவுமாம்.

4. **தெய்வச்சிலையார்** : வடசொல்லாகிய சொல்லாவது வடமொழிக்கே யுரியவாகிய எழுத்தை நீக்கித் தமிழ்மொழிக்குரிய எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும். எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும் வடநாட்டிற் பயில வழங்குதலின் வடசொல் ஆயிற்று. வடசொல்லென்றதனால் தேயவழக்காகிய பாகதச் சொல்லாகிய வந்தனவும் கொள்க. வடமொழியாவன : வாரி, மணி, குங்குமம் என்னும் தொடக்கத்தன. வட்டம், சட்டம், பட்டினம் என்பன பாகதம், பிறவும் அன்ன.

## இவ்வுரைகளை நோக்குங்கால் பின் வரும் உண்மைகள் புலனாகும்.

1. இந்நூற்பாவில் இடம்பெறும் எழுத்து என்னும் சொல், எழுத்தின் ஒலிவடிவத்தினைக் குறிக்கும். மொழிக்கண் வழங்கும் சொல்லின் மூலக்கூறுகள் ஒலித்துணுக்குக்களாக அமையும் அவ்வொலி மூலக்கூறு தனித்தோ, தொடர்ந்தோ நின்று பொருளுணர்த்துங்கால் சொற்களாக, அச்சொற்கள் தொடர்ந்து பொருளுணர்த்துங்கால் மொழியாக (Language) அமையும். அம்மொழி குறிப்பிட்ட மக்களின் பேச்சுவழக்கொடு நின்றுவிடுவதும், எழுத்துவழக்குப் பெற்றுத் திகழ்வதும் உண்டு. எழுத்துவழக்குப் பெற்ற மொழிக்குக் கட்புலனாகாத ஒலிவடிவங்களும், கட்புலனாகும் வரிவடிவங்களும் உளவாகும். மொழியின் ஒலிவடிவம், மாறுபடாததாகவும் வரிவடிவம் காலப்போக்கில் மாறுபடக் கூடியதாகவும் அமையும். ஒலிவடிவம் கால, இடச் சூழல்களால் மாறுபடுமானால் மொழியே மாறுபட்டுவிடக்கூடும். அதனால், வேற்றுமொழி யொலியுடைய சொற்கள் கலந்தால், அக்கலப்பால், கலப்பெய்திய மொழி காலப்போக்கில் வேறு மொழியாகவும் மாறிவிடும் வாய்ப்புண்டு. அளவு கடந்த, வேற்று மொழிக்கலப்பால், பண்டு தமிழ்மொழி வழங்கிய தமிழகப் பகுதி வேற்றுநிலப் பகுதியாய் (கேரளம்) வேற்றுமொழி (மலையாளம்) வழங்கும் பகுதியாய் - மாறிவிட்டதனை நினைவுகொளல் வேண்டும். இளங்கோவும் சேரமான் பெருமான் நாயனாரும் நடமாடிய தமிழகப் பகுதி, வேற்று நிலப்பகுதியாகியது, வரையறை மீறிய பிறமொழிக் கலப்பாலன்றோ! அதனால், தமிழ் மொழியை அதன் தனித்தன்மை கெடாது காக்கும் நோக்கத்தில், செய்யுள் வழக்கில் இடம்பெறும் (நிலைபேறு கருதி) சொற்களைக் கூறுங்கால் வடமொழியைத் தொல்காப்பியர் கடமையாயிற்று.

2. 'வடசொற் கிளவி' என்னும் தொடரின் பொருளைச் சிந்தித்தல் வேண்டும் சொல், கிளவி என்னும் இருசொற்களும், தனித்தோ தொடர்ந்தோ அமையும் எழுத்தான் ஆகிப் பொருளுணர்த்தும் ஒலித்தொகுதி. (Word-சொல்) எனும் ஒரு பொருளுணர்த்துவதாகும். அதனை இரு பெயரொட்டாகக் கொண்டு சமசுகிருதச் சொல் என்றே நச்சினார்க்கினியர் சேனாவரையர் ஆகியோர் கொண்டனர். இளம்பூரணர் 'ஆரிய மொழிச் சொல்' என்றே தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் தெய்வச்சிலையார், 'வடசொல்லாகிய சொல்' என்று கூறினாலும் அதன் விளக்கத்தில், 'எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும் வடநாட்டில் பயில வழங்குதலின் வடசொல் ஆயிற்று' என்பதனால், 'வட-தென்-நாட்டு மொழிகளில் கலப்புற்று வழங்கும் சமசுகிருதத்தைக் குறிப்பிட்டார். அடுத்து, 'வடசொல் என்றதனால் தேய வழக்காகிய பாகதச் சொல்லாகிய பாகதம் (பிராகிருதம்) முதலிய மொழிகளை (பாலி முதலியன உள்ளிட்ட)யும் வடமொழி என்ற சொல்லால் தழுவிக் கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது.

*சொல் என்னும் சொல் 'வார்த்தையினைக்-(word) குறிப்பதோடு* அதனை உறுப்பாகக் கொண்டமையும் 'மொழியையும் (Language) குறித்தல் உண்டு. 'மொழி பெயர் தேஎம்' (அகம் 31:15) என்னுமிடத்துப் போலச் 'சொல் பெயர் தேஎம்' (அகம் : 205 : 24) என்னுமிடத்துச் 'சொல்' என்பது *'மொழி' என்னும் பொருள்படக் காணலாம். 'தென் சொற் கடந்தான்* வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்' என்னும் கம்பர் வாக்கிலும் 'சொல்' என்பது மொழி என்று பொருள்படுவதனைக் காணலாம். (கம்ப.நகர் நீங்கு. 141). அதனால் 'வடசொற்கிளவி' என்னும் தொடருக்கு, *'வடதிசை நாட்டில் வழங்கும் மொழிகளுக்குரிய சொல்'* என்னும் பொருள் கோடல் நேரிதாகும். அப்போது வடமொழி என்று தமிழர்களால் மட்டுமே குறிப்பிடப்பட்ட சமசுகிருதம், பிறவட நாட்டு மொழிகளான பாகதம் (பிராகிருதம்), பாலி முதலான மொழிகளிலிருந்தும் தமிழ்மொழியில் இடம்பெறும் சொற்களுக்கும் இத்தொல்காப்பிய நூற்பாவே வரம்பு கோலும் விதியாகும்.

வடநாட்டுச் சமயமாகிய சமணம் தன் சமய சாத்திரப் புலப்பாட்டிற்குச் சமசுகிருத மொழியினை ஊடகமாகக் கொண்டிருப்பினும், அச்சமசுகிருதம் வைதிக சமயத்திற்கு அடிப்படையான வேதங்கட்கும் சாத்திரங்கட்கும் உரிய மொழியாகவே கொள்ளப்பட்டது. தமிழகத்தில் சமண புத்த சமயங்கள் இடம் பெறுவதற்கு முன்னரே, வைதிக சமயம் கால்கொண்டு செல்வாக்குப் பெற்றமையால்

அதற்குரிய சமசுகிருதமும் அம்மொழிச் செல்வாக்கும் தமிழகத்தில் பேணப்பட்டன. அரசியல், சமயம், கலைகள் போன்றவற்றில் சமசுகிருத தாக்கத்தினைத் தமிழ் மக்களே ஏற்கலாயினர். அதன் பயனாகத் தொல்காப்பிய மொழிக்காப்பு வேலியில் கடவுகள் ஏற்பட்டு, வடமொழி ஆக்கிரமிப்புக்கள் பெருகலாயின. சங்க நூல்களில் இரண்டு அல்லது மூன்று விழுக்காடு அளவே இடம்பெற்ற மொழிக்கலப்பு சங்க காலத்தை அடுத்து வந்த காப்பியக் காலத்தில் பெருகிய நிலையினை அறிஞர்கள் ஆராய்ந்து காட்டியுள்ளனர் 'எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்', 'சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்' என்னும் விதிகளைச் சலுகைகளாகக் கொண்டு வடபுலச் (மொழிச்) சொற்கள் தமிழில் புகுந்தன. தமிழர்களும் அந்நிலையை வணங்கி வரவேற்றனர்.

சங்க காலத்தும் அதற்கு முன்னரும், வடவேங்கடம் தென்குமரி ஆயிடைப்பட்ட தமிழகப்பகுதிகளை ஆண்ட, சேர சோழ பாண்டியர் குடிவந்த மன்னர்கள் மூவகையினரும் தமிழ் மொழியினைத் தம் தாய்மொழியாகக் கொண்டு வாழ்ந்தோராவர். அதனால் அவர்களைத் 'தமிழ்கெழு மூவர்' என்று சங்கநூல் குறிப்பிடுகின்றது. (அகம்.31-15). வட இந்தியாவில் தோன்றி, வளர்ந்து பரவிய நூல் வேத அடிப்படையிலான வைதிகநெறி தமிழகத்திலும், அதனை ஆண்ட மூவேந்தரவைகளிலும் செல்வாக்குப் பெற்றது. அதனால் வேதமொழியான சமசுகிருதமும் தமிழகத்தில் செல்வாக்கும் பெறலாயிற்று வைதிக நெறியும், சடங்குகளும் பரவலாகத் தமிழகத்தில் இடம்பெற்ற போதிலும், பிறசொற் கலப்பால் தனித்தன்மை கெடாதிருத்தல் கருதித் தொல்காப்பியர் மொழிக்காப்பு விதியினை உருவாக்கியுள்ளார்.

தன் மீது பத்துப் பாடல்கள் இயற்றிமைக்காக, அவற்றை இயற்றிய பாலைக் கவுதமனார் 'சுவர்க்கம்' புகவேண்டுமென்று பெரியனவாகப் பத்து வைதிக வேள்விகளை இயற்றிய பல்யானைச் செல்கெழுகுட்டுவன் எனும் சேர மன்னன், (பதிற் 3. அம்பதிகம்), 'வேத வேள்வித் தொழில் முடித்ததூஉம், அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்' என்று போற்றப் பெற்ற (புறம் 224 : 9, 10) கரிகாற் பெருவளத் தான் எனும் சோழ மன்னன், 'வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி, யூபம் நட்ட வியன் களம்' (புறம் 15 : 20,21) பல கண்டமையால் 'பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுத' என்று சிறப்பிக்கப்பெற்ற பாண்டிய மன்னன் போன்ற தமிழ் அரசர்கள் தம் நாட்டில் வேதநெறி தழைத்தோங்க வழி செய்தனர்! ''நீர் நாண நெய் வழங்கியும், எண் நாணப் பலவேட்டும், மண் நாணப் புகழ் பரப்பி'' வாழ்ந்த, பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் புகழ்பரப்பி'' வாழ்ந்த, பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைச் சங்கப் புலவர்

சிறப்பித்துப் பாடுமளவு (புறம். 16) வேதவித்துக்கள் தம் வைதிகச் செயல்களால் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவிர்சடை முனிவர்கள் எரியோம்பிச் செய்யும் வேள்விப் புகையினை வெறுத்துக் குயில்கள் தம் பெடைகளொடு வேற்றிடம் செல்லும் என்று கூறுமளவு (பட்டினப். 54-56) வைதிக நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன. வைதிக நெறிச் செல்வாக்கும் செயல்களும் இவ்வாறு மிகுந்திருந்த நிலையிலும், சற்றே குறைய இரண்டாயிரம் பாடல்கள் கொண்ட சங்கத் தொகை நூல்களில், இரண்டு அல்லது மூன்று விழுக்காடு அளிவிலேயே பிற (வட) சொற்கலப்பு இருந்துள்ளமைக்கும் காரணம், தொல்காப்பிய ஆணையேயாகும். சங்க காலத்தை அடுத்து வந்த காப்பியக் காலத்தில் அக்கலப்புப் பன்மடங்கு பெருகிய காரணங்களைக் கண்டறிதல் வேண்டும்.

1. வைதிக சமயத்தை யடுத்துப் புத்த சமண சமயங்கள் தமிழகத்தை அடைந்து தம் சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டமை. சமயப் பரப்பு முயற்சியும், அது காரணமாகத் தமிழகத்தே நிகழ்ந்த வாதப் போராட்டங்களும் தமிழகத்தில் இடம்பெற்றன. அவற்றின் விளைவையும், பிறமொழிச் சொற்கலப்பின் தீவிரத்தையும் மணிமேகலை, சூளாமணி போலும் தமிழ் நூல்களால் அறியலாம்.

2. தமிழ்மொழியினைத் தாய்மொழியாகக் கொள்ளாத வேற்று மொழியாளர் ஆட்சி தமிழகத்தில இடம் பெற்றமையும், அவர்கள் சமசுகிருதத்தின் மீது, பற்றுமிகக் கொண்டிருந்தமையும் சங்க காலத்திற்குப் பின்னர்த் தமிழகத்தைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த, களப்பிரர், பல்லவர் ஆகியோர் தமிழினைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களாகவும், சமசுகிருதப் பண்பாட்டில் மோகமுடையவர்களாகவும் இருந்துள்ளனர். இடைக்காலத்தில் மீண்டும் தமிழக ஆட்சியில் தலையெடுத்து விளங்கிய சோழர்கள், தமிழராயினும் சளுக்கியர் போன்றோரோடு மண உறவு, அரசியல் தொடர்பு கொண்டவர்களாக இருந்துள்ளனர். காலப்போக்கில் தமிழக ஆட்சியினைக் கைப்பற்றிய இசுலாமியர், நாயக்கர், மராட்டியர் ஆகியோரும் கிறித்து சமயத்தைப் பின்பற்றிய பல மேலை நாட்டவர்களும் தமிழ்மக்களின் தாய்மொழி ஆர்வம் மங்கவும், பிறமொழிக்கலப்பு மிகவும் காரணமாயினர். வேற்று மொழியினர் ஆட்சிகளின் பயனாகச் சமசுகிருதம், அரபு, உருது, பாரசீகம், தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம், பிரெஞ்சு, போர்த்துகீசியம் முதலான பலமொழிச்சொற்களும் தமிழ் மொழியிற் கலப்புற்றன. தமிழிற் கலந்த அக்கலப்படச் சொற்களை அறிஞர் பலர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளனர். கடந்த இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக இந்தியாவில் ஆட்சிமொழியாக அமைந்த ஆங்கிலமொழிச் சொற்கள்,

தமிழ்க்கல்வியறிவற்ற பாமரர்களிடையேயும் பேச்சு வழக்கில் மிக்க அளவில் கலப்புற்றன. இசுலாம், கிறித்துவம் ஆகிய சமயங்கள் தமிழ் மக்களிடையே பரவிய காரணத்தால் அச்சமயத்தமிழர்களும், தமிழரல்லாதாரும் இயற்றிய உரைநடை நூல்களில், பெரிய அளவிலும், செய்யுள் நூல்களில் சிறிய அளவிலும் அவ்வச்சமயக் கலைச்சொற்கள் இடம்பெற்றன.

3. சமசுகிருதத்தை (வடமொழி) அடிப்படையாகக் கொண்ட வைதிக சமயம், தமிழகத்துச் சமயங்களாகிய சைவம், வைணவம் ஆகியவற்றைத் தம்வயப்படுத்திச் செல்வாக்குப் பெற்றபின், தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே கூடத் தம் சமயக் கோட்பாடுகளைச் சமசுகிருதத்தில் நூல்களாக வெளியிடுவாராயினர். தமிழினைத் தாய்மொழியாகக் கொண்ட ஆதிசங்கரரும், இராமானுசரும், தம் கோட்பாடுகளை விளக்கிச் சமசுகிருதத்தில் (வடமொழியில்) நூல்கள் பல இயற்றியுள்ளனர். அவர்கள் தமிழில் நூல்கள் இயற்றாமையும் குறிப்பிடத்தக்கது. வடநாட்டில் சமசுகிருதத்தின் வரிவடிவமான 'தேவநாகரி' எழுத்தின் வேறாகத் தமிழகத்தில் அம்மொழியினை எழுதுவதற்கெனத் தமிழ் வரிவடிவோடு ஒத்துக் காணப்படும் கிரந்தம் என்னும் எழுத்துக்களை (லிபி) உருவாக்கினர். தமிழ்மொழியும் சமசுகிருதமும் சரிக்குச் சரியாகக் கலந்து எழுதப்படும் 'மணிப்பிரவாளம்' என்னும் நடையும் தமிழகத்தில் உருவாகியது. தமிழகச் சமணர் எழுதிய 'ஸ்ரீ புராணமும்', ஆழ்வார்களின் அமுதத் தமிழ்ப்பாக்களுக்கு எழுதப்பட்ட வியாக்யானங்களும் இந் நடையில் வரையப்பட்டுள்ளன.

தொல்காப்பிய மொழிக்காப்பு ஆணைக்குட்பட்டு, மிகமிகக் குறைந்த அளவில், சங்க காலத்தே தமிழில் இடம்பெற்ற பிறமொழிச் சொற்கலப்பு, காலப்போக்கில் பெருகி வந்துள்ளமையினையும் எதிர்காலத்தில் மேலும் பெருகுதற்கான வாய்ப்பின்மையினையும் உணர்ந்த பவணந்தி முனிவர் தாமியற்றிய நன்னூலில், வடமொழிப் பெயரால் 'பதவியல்' எனும் பெயரில் ஓர் இயல் அமைத்துள்ளார். அதன் இறுதியில் வடமொழி ஆக்கம் என்றொரு பகுதி அமைத்து, வடமொழிச் சொற்கள் (சமசுகிருதம்) தமிழில் இடம்பெறும்போது எவ்வெவ்வகையில் மாற்றமெய்தும் என்பதனை விளக்கி ஐந்து நூற்பாக்கள் எழுதியுள்ளனர். தொல்காப்பியர், ''வடவெழுத்து ஒரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்'' என்று சுருக்கமாக உரைத்துள்ளதன் நெடிய விளக்கமாக அந்நூற்பாக்கள் அமைந்தன. வடமொழி வருகைக்கான நெடும் பாட்டையாகவும் அப்பகுதி அமைந்தது. அந்நிலையும் மாறிக் காலப்போக்கில்

வடமொழியின் ஒலி மாறாமலேயே, அம்மொழிச் சொற்கள் தமிழில் எழுதும் நிலையும் தோன்றியுள்ளது. ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொல் அவற்றின் மூல ஒலியோடேயே தமிழில் ஆதிக்கம் செலுத்தும் நிலை உருவாகியுள்ளது. பேச்சு வழக்கிலும், உரைநடை செய்யுள் ஆகிய வழக்குக்களிலும், தாளிகை வழக்கிலும் தமிழின் பன்மொழிக் கலப்புப் பெருகி வருகின்றது. இற்றை நாள் தமிழ்க் குழந்தைகள் 'அப்பா' 'அம்மா' என்றழைப்பதனை மறந்து, அவர்களை 'மம்மி' 'டாடி'களாக்கி யுள்ளார்கள்! பெற்றோர்களும் தம் மக்கள் அவ்வாறு தம்மை அழைப்பதனைக் கேட்டு அகமகிழ்கின்றனர். அறிவியற் கல்விப்பெயரால், அறிவியலறிஞர்கள், பிறமொழிச்சொற்களை அப்படியே தமிழில் எழுதவும், இயைத்துப் பேசவும் முனைந்துள்ளனர். இப்படியே சென்றால், இந்த நூற்றாண்டின் முற்பகுதி முடிவிற்குள் தமிழ் மொழி, ஒரு கலப்பு மொழியாய் - தமிழர்கள் கலப்பின மக்களாய் மாறிவிடுதல் கூடும். பிழைப்பு நாடிப் புலம்பெயர்ந்து தென்னாப்பிரிக்கா, போன்றதொரு தூரநாடுகளுக்குச் சென்று தங்கிவிட்ட தமிழர் நிலையினை (மொழியால் இனத்தால் கலப்புற்ற நிலை) தமிழகத்திலேயே தமிழ் மக்கள் அடைந்து விடுவர்.

தமிழுணர்வு மங்கிப் பிறமொழி மோகமும், கலப்பும் மிக்குவரும் நாளில், தாய்மொழித் தூய்மை போற்றும் தனித் தமிழுணர்வு தமிழகத்திலும், கடல் கடந்து வாழும் தமிழர் உள்ளத்திலும் தோன்றியுள்ளமை ஆறுதல் அளிப்பதாக உள்ளது. சூரிய நாராயண சாத்திரியாரைப் பருதிமாற் கலைஞராகச் செய்த தமிழுணர்வு, சுவாமி வேதாசலனாரை மறைமலையடிகளாக மாறச் செய்த தமிழுணர்வு, அரும்பாகிப் போதாகி, மலராகக் காய்த்துக் கனிந்து, 'தனித்தமிழ் இயக்கமாக' இயங்குவது கண்டு தமிழுணர்வு மிக்கவர்கள் பெருமகிழ்ச்சி கொள்ளலாம் பாவாணராக, பாரதிதாசனாக, அவர்களனைய மொழி ஞாயிறுகள் பல தோன்றித் தமிழ் வானிற் கவித்துள்ள மொழிக் கலப்பிருளை முற்றிலுமாக - முடியாவிடில் பெருமளவில் - அகற்ற முயலல் வேண்டும். பிறமொழிச் சொற்களைத் தமிழ ஒலிக்கு ஏற்ப மாற்றித் தமிழ் மொழியிற் பயன்படுத்தி நூல்களை உருவாக்கலாம் என்பதனை உணர்த்திக் காட்டும் வகையில், ஒவ்வொரு தொகுதியும் ஆயிரம் பக்கங்கள் கொண்டதாகப் பதினான்கு தொகுதிகளில் 'வாழ்வியற் களஞ்சியம்' என்னும் நூற்றொகுதியைத் தமிழ் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது போற்றற்குரிய செயலாகும்.

உலகின் எப்பகுதியில் எம்மொழியில் புதிய கருத்துக்கள் தோன்றினாலும், அவற்றை ஏற்பதற்குத் தமிழ்மொழியின் வாயில்களும் காலதர்களும் திறந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அவை தமிழில் இடம்பெறும் போது, தமிழ் உருவில் அமைதலே ஏற்புடையதாகும். 'வடசொற் கிளவி' எனத் தொடங்கும் தொல்காப்பிய முற்பட்ட விதியாகக் கருதலாகாது. மொழியின் ஒலியியல்பு கெடாதவாறு, பிறசொல்வரவினை ஏற்க அமைத்த காப்புவாயிலாகும். அந்தக் காப்பு, தொல்காப்பியர் காலத்தினும் மிகுதியாக இக்காலத்திற்குப் பொருத்தமுடையதாகும். தமிழ் மொழியின், தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையான கலைச்சொற்களைத் தமிழ் மொழியில் உருவாக்கிக் கோடலும், தமிழ்மொழி மரபு குன்றாது தழுவிக் கோடலும் இக்காலத்திற்கு இன்றியமையாதனவாகும். அந்தக் கடமையையும் உரிமையையும் தமிழ் மக்கட்குக் காலங்கள்தோறும், நினைவூட்டி நிற்பதே 'வடசொல் கிளவி' என்னும் தொல்காப்பிய நூற்பாவின் குறிக்கோளாகும்.

# தேவாரத்தில் தத்துவ விளக்கம்

**வித்துவான் தா.குருசாமிதேசிகர்**

## முன்னுரை :

தேவாரம் தெற்கே ஓதப்படும் வாரப்பாடல்கள். அருள்வாக்குகள் அவை. தென்தமிழ்ப் பயன்களைத் தெரிவிப்பவை. நான்மறைச் செம்பொருளைத் தெரிவிப்பவை. சிவாகம வழிபாட்டில் ஏற்கப்பட்டவை; திராவிட வேதம் எனப்படும். இது சங்கத் தமிழ் வழிப்பட்ட நெறியைத் தெளிவுபடுத்துகிறது. ஆதலால் மாட்டிற்கு உடனாகவும் முன்னாகவும் தோன்றிய வாலைவிட, பின்னால் முளைத்த கொம்புகட்கு வலிமை மிகுதியாயிருப்பது போலப் பின்னால் தோன்றிய தேவாரப் பாடல்கள் வழிபாட்டிற்குரியனவாகவும் ஆயின. மெய்யுணர்வும் மேலான முறையில் விளக்கம் தருவன. ஆதலின் பாரதியார், 'வானமளந்த தனைத்தும் அளந்திடும் தமிழ்மொழி வாழ்க' என்றார். பாரதிதாசன் 'நற்போற்றித் திருவகவல்' என்று வணங்குவார். இத்தேவாரப் பாடல் வழிபாட்டுப் பாடலாக இருந்தாலும் தமிழரின் மெய்யுணர்வு தத்துவ அறிவு - தக்க முறையில் விளக்கப்பட்டுள்ளது என்று எமது ஆய்வு நிறுவனர் செந்தமிழ்ப் பரமாசாரிய மூர்த்தி* அருளிச் செய்கிறார்கள்.

## தேவாரச் சிறப்பு :

மன்னர்கள் தேவாரத்தால் பலன் பெற்றனர்; மக்களும் பலன் பெற்றனர். இலக்கியம் இன்றைய வாழ்விற்கும் பயன்தர வேண்டும். அந்தவகையில் இன்றும் தேவாரம் கோயிலில் குடி ஏறியுள்ளது. அத்தேவாரம் பொருள் கூறுவது எட்டு வகை என்பர் அது குருவருள், பரையின் வரலாறு, அஞ்செழுத்துண்மை, கோயில்திறம், சிவனுருவம், திருவடிகள், அருச்சனை, அடிமை** என்று வகைப்படுத்தினர் இதன் பகுதிகள் தனியாகச் சிந்திக்கத் தக்கவை. அவற்றுள் சிவன் உருவம் சிந்திக்கத்த தக்கவை. இச்சிந்தனை தொல்காப்பியம் தொட்டுக் காட்டிய சிந்தனைதான்.

## தொல்காப்பியம் கூறும் கடவுள் :

- ''தொல்காப்பியத்தில் சமண சமய - புத்த சமயக் குறிப்புகள்

சிறிதும் இல்லை. மாயோன், சேயோன், வருணன், வேந்தன் என்னும் நிலத் தெய்வ வழிபாடுகளைக் கூறுவார் தொல்காப்பியர். ஆனால் 'கடவுள் ஒன்றே' என்னும் தெளிவுடைய கொள்கையர். உலகம், உயிர், என்பவற்றிற்கு வேறாகக் கடவுள் ஒன்று உண்டு என்பதும், அவரை வழிபடுவதன் மூலம் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறக்கும் நல்வாழ்வு பெறுவர் என்பதும் தொல்காப்பியர் கொள்கை தெய்வ வழிபாட்டினால் வினைப் பயன்களை வென்று மேன்மேல் சிறத்தல் கூடும் என்பதும் தொல்காப்பியர் கொண்டொழுகிய கடவுட் கொள்கை'' - என்று பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் தொல்காப்பியம் - இலக்கிய வரலாற்றில் (பக்கம் 171) முடிவு கூறுவது தேவாரத்தின் தத்துவக் கொள்கை விளக்கம் செய்வதற்குப் பாயிரமாக அமைகிறது.

## தமிழரின் தத்துவ உணர்வு :

தமிழரின் தத்துவ உணர்வு - 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' - என்பதில் தொடங்கி 'நீர் வழிப்படும் புணைபோல - உயிர் வினைவயப் பட்டியங்கும்' என முடித்தார் புறநானூற்றுப் புலவர். திருவள்ளுவர்,

*"சுவைஒளி ஊறு ஓசை நாற்றம் ஐந்தின்*
*வகைதெரிவான் கண்ணே உலகு"*

- என்று மெய்யுணர்விற்கு ஐந்தவித்தலும் யோகப்பயிற்சியும் துணை என்பார். மெய் என்பது தத்துவம் எனப்படும். இத்தத்துவத்தைப் பண்டைத் தமிழ் நூல்கள் இலை மறை காய் எனச் சுட்டிச் செல்கின்றன. எனினும் திருஞான சம்பந்தர் தேவாரம் போல் தெளிவாக விளக்கிய தமிழ் இலக்கியம் எதுவும் இல்லை.

## சைவசித்தாந்தம் கூறும் உண்மை :

சைவ சித்தாந்தத் தத்துவ உணர்வு தமிழ் மக்களின் வாழ்வியல் முடிவு உணர்வு. யாருக்காக வாழுகிறோம்? என்ற வினாவிற்கு விடை

---

* *திருவருட்செய்தி - பக்கம் 74. Part I*

** *"குருவும் வெண்ணீறு எழுத்து அஞ்சுங்கோயில்*
*அறுவும் எந்தலைமேல் ஆக்கும் - திருவடியும்மீ*
*சிட்டான அர்ச்சனையும் தொண்டும் சிவாலயர்க்கு என்று*
*இட்டார் அகத்தியனார் எட்டு " - அகத்தியர் தேவாரத்திரட்டுப்பாடல்*

தருவது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்றிய மெய்யுணர்வு, சங்கநூல்களிலும், சிறப்பாகத் திருக்குறளிலும் இதனை அறியலாம். அதனைத் திருஞானசம்பந்தர் வழிமொழிந்து விளக்குகிறார்.

மண், புனல், அனல், காற்று, ஆகாயம் எனப் பூதங்கள் ஐந்து. மெய், வாய், கண், மூக்கு, செவி, என அறிகருவிகள் ஐந்து. வாக்கு, கை, கால், எருவாய், கருவாய், எனத் தொழிற் கருவிகள் ஐந்து. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், எனத் தன்மாத்திரைகள் ஐந்து. இவை புலனாகப் புறத்தே விளங்கும் தத்துவக் கூறுகள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்று புலனாகாது அகத்தே விளங்கும் அந்தக் கரணங்கள் நான்கு. இந்த இருபத்து நான்கும் ஆன்மத் தத்துவங்கள். இவற்றை,

*புவிமுதல் ஐம்பூதமாய்ப் புலன் ஐந்தாய்*
*நிலன் ஐந்தாய்க் கரணம் நான்காய்*
*அவையவைசேர் பயனுருவாய் அல்ல*
*உருவாய் நின்றான் அமரும் கோயில்*

*தவமுயல்வோர் மலர் பறிப்பத் தாழவிடு*
*கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்*
*கவண் எறி கற்போல் சுனையில் கரைசேரப்*
*புள்ளிரியும் கழுமலமே*

- என்று சிவபெருமான் எழுந்தருளிய இடத்தை அடையாளம் காட்டித் தத்துவ விளக்கம் செய்கிறது இத்தேவாரப்பாடல்.

## தமிழரின் மெய்யுணர்வு :

இருபத்து நான்கு தத்துவங்கட்கு உட்பட்டவர்கள் வைதிக சமயத்தார். ஆனால் தமிழரின் சைவநெறியில் இவற்றுக்குமேல் இவற்றினும் நுண்ணியனவாகப் பன்னிரண்டு தத்துவங்கள் உள்ளன. அவை வித்தியா தத்துவம் ஏழு சிவதத்துவம் ஐந்து இவை இரண்டும் தமிழர் கண்டுபிடித்த - மெய்ஞானத்தின் முடிநிலை ஆகும். இதுவே மெய்யுணர்வு எனப்படும். இம்மெய்யுணர்வு நிலையாமையை உணர்தல், துறவு மேற்கொளளுதல், மெயபற்றல், அவாவறுத்தல் என்ற நான்கின் தொழிற்பாட்டால் அமையத் தக்கது இதனைத் திருவள்ளுவர் ஐம்புலன்கள் வழிபோகாமல் அகததடக்கி விட்டதனால் மட்டும் பயனில்லை; ஒருபொருள் உண்டு என்ற மெய்யுணர்வு எயதலே பயன் என்று,

*ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே*
*மெய்யுணர்வு இல்லா தவர்க்கு*

என்ற குறளால் விளக்கம் தருவார். ஜைனம் முதலாகப் பிறசமயம் நிலையாமையை இளமை, செல்வம், யாக்கை நிலையாமைகளை எடுத்துக்கூறிப் புறத்துறவையே வற்புறுத்தும். ஆனால் சைவ சித்தாந்தத் தேவாரமோ அகத்துறவையே விதந்து பேசி வற்புறுத்தும்.

*கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானை கரவார்பால்*
*விரிவாடும் பெருமானை விடைஏறும் வித்தகனை*
*அரவாடச் சடைதாழ அங்கையினில் அனல்ஏந்தி*
*இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே*

என்று திருநாவுக்கரசர் தேவாரம் சிவத்தை வழிபடும் வழி கூறுகிறது.

## முடிவுரை :

இத் தேவார வழிநின்று வழிபட்டவர்கள் வள்ளல்பாண்டித் துரைத்தேவரவர்களும், பாஸ்கரசேதுபதி அவர்களுமாவர். அவர்கள் தமிழரின் தத்துவ உணர்வுகளை வெளிப்படுத்தும் தேவாரத்தை எவ்வாறு பேணிப் புரந்தனர் என்பதை - என் பெரிய தந்தை மதுரஞ்சுந்தரபாண்டியனார் கூறிய - எழுதிய சான்றுகளைத் தொடர்ந்து கட்டுரையாக வடிக்கத் திருவருள் கூட்டுமாக.

| | | |
|---|---|---|
| **நூல்** | : | **வ.வே.சு.அய்யர்** |
| **ஆசிரியர்** | : | **கோ.செல்வம்** |
| **வெளியீடு** | : | **சாகித்ய அக்காதெமி<br>புதுதில்லி - 110 001** |
| **விலை** | : | **ரூ.25** |

வாகனேரி வேங்கடேச சுப்பிரமணிய ஐயர் திருச்சி வாகனேரியைச் சேர்ந்த வேங்கடேச ஐயருக்கும், காமாட்சி அம்மாளுக்கும் 2.4.1881இல் பிறந்தார். சென்னையில் வழக்கறிஞருக்குப் பயின்று பாரிஸ்டர் பட்டக் கல்விக்கு இலண்டன் சென்றார். திருச்சியில் வழக்கறிஞர் தொழில் புரிந்தார்.

'திரு.வி.க.'வால் பத்திரிக்கைத் துறையில் அறிமுகம் செய்யப்பட்டு 'தேசபக்தனில்' தீவிரமாகத் தேசபக்தியைப் பரப்பினார் இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்காக 'தேசபக்தன்' இதழ் மூலம் பாடுபட்டார். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்த காந்தியடிகள் சத்தியத்தை மேற்கொண்டது போல் வாஷிங்கடன் வாழ்க்கையைப் பார்த்த வ.வே சு. ஐயர் தமிழ்நாட்டு வாஷிங்டன் என்று சொல்லுமளவிற்கு உழைப்பால் உயர்ந்தார். வ.வே.சு. ஐயர் மானுடம் வென்ற மாமானுடர்; மனிதநேயம் மிக்கவர்; மனிதனை மனிதனாய் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வந்தவர். மரியாதையின் பெருமையை மதித்தவர்; அன்பின் வழிப்பட்டவர், வேகம் கூடியவராயினும் விவேகம் நிறைந்தவர். தனிமனிதன் நடந்து கொள்ளும் பாங்கை 'பிரயோக இலக்கணம்' என்னும் நூலில் வலியுறுத்திச் செல்கிறார். கர்ஸன் வைலியைச் சுட்ட திங்கராவும், ஆஷ் துரையைச் சுட்ட வாஞ்சி நாதனும் இவரது மாணவர்கள்.

இலக்கியத் திறனாய்வும், சமுதாய விழிப்புணர்ச்சியும் அவரது இருகண்களாகத் திகழ்ந்தன பெண்ணியம் பற்றி இருகட்டுரைகள் எழுதியுள்ளார். மகளிர் மேம்பாடு குறித்து சிந்தித்தும், பேசியும், எழுதியும் வந்துள்ளார். மங்கயர்க்கரசியின் காதல், குளத்தங்கரை அரசமரம் போன்ற படைப்புக்கள் பெண்களை இழிவு படுத்திய அக்காலச் சமூகத்திற்குப் பாடம் கற்பிப்பதாக அமைகின்றன.

வ.வே.சு. ஐயர் சிறந்த மொழிபெயர்ப்பாளர். "Kamba Ramayana A Study" என்ற நூலில் கம்பராமாயணத்தை ஆங்கில மொழியில் ஆய்வு செய்துள்ளார். கம்பனின் மூலக்கருத்து கெடாவண்ணம் மொழிபெயர்த்து உலக மக்களுக்குக் கம்பனின் தனிச் சிறப்பை விளக்கியுள்ளார். பத்து மொழிகளில் புலமை படைத்தவர் ஒப்பாய்வதில் வல்லவர். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்பதைத் தம் திருக்குறள் மொழி பெயர்ப்பில் செயல்படுத்திய உலக இலக்கியவாதி; அவர் பன்மொழி வித்தகராகையால் அவரது பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் கருத்தாழம் நிரம்பியிருந்தது. உயிர் ஓட்டம் நிலவியது; அவரது பரந்த அறிவு புலப்பட்டது

வ.வே.சு. ஐயரின் வரலாறு அறிஞர்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும், இளம் தலைமுறையினருக்கும், எழுத்தாளர்களுக்கும். படித்துப் பயன்பெறத் தக்க வகையில் கோ.செல்வம் அவர்கள் இந்நூலில் பதினெட்டுப் பகுதிகளில் சிறப்பாகத் தொகுத்தும், பகுத்தும் ஆய்வு செய்துள்ளார்

*- சி.மொ.இராசேந்திரன்*

அன்பு அச்சகம், மதுரை. © 741116